விஷ்வவாணி

சமர்ப்பண்

Rs. 10/- | Vol. 33 - Issue 1
Dec. 2019 & Jan. 2020 Combined issue

கர்த்தரின் பணி
ஸ்தோத்திரிப்போரின் பணி

10.01.1941 - 19.12.2013

நினைவுகூருகிறோம்...

விஷ்வவாணி பணியின் ஸ்தாபகர் எமில் அண்ணன் அவர்களது மகிமைப் பிரவேச தினமாகிய 19.12.2013ஐ தேவ சமுகத்தில் ஸ்தோத்திரத்துடனும் கண்ணீருடனும் நினைவுகூருகிறோம். ஆண்டுகள் ஆறு கடந்தாலும், ஊழியப் பாதையில் அண்ணன் அவர்களது அடிச்சுவடுகளில் அர்ப்பணத்துடன் முன் நடக்கிறோம்; அயராது உழைக்கிறோம்; விசுவாசத்தோடும் இந்திய விசுவாசிகளின் ஏகோபித்த ஒத்தாசையோடும் முழங்கால்களால் ஒரு இலட்சம் இந்தியக் கிராமங்களை இயேசு கிறிஸ்துவுக்குள் ஆசீர்வாத நிலையங்களாகக் கண்டுவிடவேண்டுமென்பதில் தீர்க்கமாக முன்நடக்கின்றோம்!

இமாலயப் பிராந்திய ஜெப முகாம்

''இந்த மலைநாட்டை எங்களுக்குத் தாரும்'' என்று தேவனை நோக்கிக் கெஞ்சும் ஜெபங்களுக்கான பிரதியுத்தரங்களை மேற்கு வங்காளத்தின் இமயமலை அடிவார கிராமங்களில் அனுபவத்தில் கண்டுணரும் கண்கள் பாக்கியமுள்ளவைகள்!

சிலிகுரியின் மட்டிகரா பயிற்சி நிலையத்தில் 2019 அக்டோபர் 29 முதல் 31 வரை முகாமிட்டு ஜெபித்த அறுநூறு விசுவாசிகளுக்காகக் கர்த்தருக்கு ஸ்தோத்திரம். கூச் பிகார், அலிபூர்துவார், நியூ ஜல்பைகுரி, டார்ஜிலிங், கலிம்போங் ஆகிய மாவட்டங்களிலிருந்து வாஞ்சையோடு பங்கெடுத்த விசுவாசக் கூட்டத்தார் சுவிசேஷ ஊழியத்தின் அவசியத்தையும் அவசரத்தையும் அறிந்தவர்களாக முதலாவது தங்களைத் தேவனுக்கும், பின்பு சுவிசேஷ வேலைக்கும் சமூலமாய்ச் சமர்ப்பித்தனர். இமயமலை அடிவாரத்தின் இரண்டாயிரம் கிராமங்கள் இயேசுவின் சிலுவையடிவாரம் வந்தது என்ற அநந்த நாளுக்காக அதிகக் கண்ணீரோடும் மிகுந்த பாரத்தோடும் முயற்சியெடுக்கும் ஊழியர்கள் - பணிப் பங்காளர்கள் நம் அநுதின ஜெபத்திற்குரியவர்கள். பல்ஜித் பசுமத்தா, சமீர் ஈஷ்வராரி, பிரகாஷ் சேத்திரி, நீம் ஷெரிங் லெப்சா ஆகிய பிராந்திய ஒருங்கிணைப்பாளர்களுடன் ஜெப முகாமை ஒருங்கிணைத்த ரோஷன் நர்ஜினாரி மற்றும் மட்டிகரா அலுவலக ஊழியர்களைத் தேவன் தொடர்ந்து பெலப்படுத்தி, பணியில் வல்லமையாய்ப் பயன்படுத்துவாராக! - அசானந்த் லிமா.

எமில் அண்ணனின் சிந்தனை வரிகள்

- கர்த்தரின் பணி ஸ்தோத்திரிப்போரின் பணி!
- கேட்டுப் பெற்றுக்கொண்டவர்கள், கொடுத்தவருக்கு நன்றி நவிலாவிட்டால், பெற்றதையெல்லாம் இழப்பார்கள், மறுமுறை கேட்டாலும் பெறார்கள்!
- வாங்குவது தேவைகளைச் சந்திப்பதற்கு! துதிப்பது தேவனுக்குள் வளர்வதற்கு!
- எரிகோ கோட்டையை நொறுக்குவது அணுகுண்டுகள் அல்ல, கர்த்தருடைய ஜனங்களின் ஸ்தோத்திர கீதங்கள்!
- மார்த்தாள் வேண்டுகிறாள், மரியாள் போற்றுகிறாள்; வேண்டுகிறவர்களைவிட போற்றுகின்றவர்களே கனம்பெற்றவர்கள்!
- அவசரங்கள் சந்திக்கப்பட ஓடிவருவார்கள், அவசியம் இல்லையென்றால் மறந்துவிடுவார்கள் – அதுவே மனிதன்!
- மற்ற ஒன்பது பேர் எங்கே? (பக்கம் 8)

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மகிமையின் சுவிசேஷம் இந்தியக் கிராமங்களை ஆசீர்வதிப்பதைக் காண்பதே விஷ்வவாணி பணியின் தரிசனம்!

விஷ்வவாணி சமர்ப்பண்
Dec.19 & Jan.20

பதிப்பு அலுவலகம்
1-10-28/247, ஆனந்தபுரம், குஷாய்குடா,
E.C.I.L. P.O, ஹைதராபாத் - 500062
✆040-27125557.
E-mail: samarpan@vishwavani.org

நிர்வாக அலுவலகம்
20, ராகுல் தெரு, TMP நகர், புதூர்,
அம்பத்தூர், சென்னை – 600053
✆044-26869200
E-mail: vishwavaninet@vishwavani.org

விஷ்வவாணி சமர்ப்பண் பத்திரிகை தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு, மராத்தி, குஜராத்தி, ஹிந்தி, ஒரியா, பெங்காலி, ஆங்கிலம், காக்பொறாக், சோரா ஆகிய 12 மொழிகளில் பிரதி மாதமும் வெளியிடப்படுகின்றது. ஆண்டு சந்தா ரூ. 100/-.

ஆன்லைனில் ஈகை அனுப்ப வங்கி விபரங்கள்

Bank	: State Bank of India
A/C Name	: VISHWA VANI
A/C No.	: 10151750252
IFS Code	: SBIN0003273
Branch	: Amanjikarai, Chennai - India.

இரசீது அனுப்புவதற்கு உதவியாக உங்கள் முகவரியைத் தெரிவியுங்கள்:
✆ 9444455646. Email: vishwavaninet@vishwavani.org

பருகப்போவது

3 ....சிந்தனைக்கு
4 ....நிர்வாக இயக்குநரிடமிருந்து
8 ....சிறப்புக் கட்டுரை
11........ஓர் பிரார்த்தனை
12.......சின்னச் சின்ன உணர்வுகள்
16.......அன்பின் பகிர்வுகள்
18.......124 புதிய ஆராதனைக் குழுக்கள்
21.......ஜெப ஒருங்கிணைப்பாளரிடமிருந்து
23......பணித்தளச் செய்திகள்
32......ஆத்துமா கர்த்தரைத் துதிக்கின்றது
34 .....நடப்புச்செய்திகள்

நற்செய்திப் பணியில் ஆர்வமுடன் இணைந்து ஜெபித்து
வருடம் முழுவதும் ஆதரவுக் கரம் நீட்டிய உங்களுக்கு

நிர்வாக இயக்குநரின் துதி, ஜெப கடிதம்!

வருஷத்தைத் தம்முடைய பரிபூரண நன்மையால் முடிசூட்டும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் ஆசீர்வாதமான நாமத்தில் அன்புடன் உங்களை வாழ்த்துகிறேன்.

அனைத்து ஊழியர்களின் சார்பிலும் கிறிஸ்து பிறப்பின் மகிழ்ச்சியையும் புதிய ஆண்டு நல்வாழ்த்துக்களையும் உள்ளத்தின் ஆழத்திலிருந்து தெரிவிக்கிறேன். கர்த்தருடைய நிறைவான அருள் பிரசன்னம் உங்களை ஆசீர்வதித்து சகல நாட்களிலும் வழிநடத்துவதாக. விஷ்வவாணியின் பணிகளுக்காக தொடர்ந்து ஜெபியுங்கள், உற்சாகமாய்க் கொடுத்து ஆதரியுங்கள், தன்னார்வமாய் இணைந்து செயல்படுங்கள்.

என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி:

2019ம் ஆண்டில் கர்த்தர் நமது தனிப்பட்ட, குடும்ப வாழ்விலும், நற்செய்திப் பணியிலும் பாராட்டிய நன்மைகள் ஏராளம், தாராளம் மற்றும் விஸ்தாரம்! தகுதியற்ற நமக்குத் தேவன் அருளிச்செய்த மகா திரளான கிருபைகளுக்காக என் ஆத்துமாவே, கர்த்தர் செய்த சகல உபகாரங்களையும் மறவாமல் அவரை என்றென்றும் ஸ்தோத்திரி, அல்லேலூயா! என்று கூறி மகிழ்வோம். மேலும் அவர் நமக்குச் செய்த மகா நன்மைக்குத் தக்கதாகவும் கர்த்தருடைய கிரியைகளையும் துதிகளையும் பிரஸ்தாபம்பண்ணுவோமாக.

சங்கீதம் 147:12ல் ‘‘எருசலேமே, கர்த்தரை ஸ்தோத்திரி; சீயோனே, உன் தேவனைத் துதி’’ என்று எதற்காகக் குறிப்பிடப்பட்டுள்ளது?

- 147:2 – கர்த்தர் தமது ஜனங்களின் வாழ்வைக் கட்டுகிறவர்
- 147:3 – இருதயம் நொறுங்குண்டவர்களைக் குணமாக்குகிறவர்
- 147:4 – உன்னைப் பெயர்சொல்லி அழைத்து அன்புகூருகிறவர்
- 147:5,6– நமக்குக் கற்றுக்கொடுப்பவர், வாழ்வை உயர்த்துபவர்
- 147:9 – அநுதினமும் ஆகாரம் கொடுத்துப் போஷிப்பிப்பவர்
- 147:13 – நமது சந்ததியைப் பாதுகாக்கிறவர், ஆசீர்வதிக்கிறவர்
- 147:14– நமக்குச் சமாதானமும், திருப்தியும் அருளிச்செய்கிறவர்

எனவே, நம்முடைய வாய் கர்த்தரின் துதியை எப்பொழுதும் சொல்வதாக. ‘‘எந்நாளும் ஆண்டவருக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக; நம்மேல் பாரஞ் சுமத்தினாலும் நம்மை இரட்சிக்கிற தேவன் அவரே’’ சங்கீதம் 68:19.

உங்கள் நாமங்கள் ஜீவ புஸ்தகத்தில் இருக்கிறது:

எங்களுக்கு மிகவும் பிரியமான பணிப்பங்காளர்களே, கடந்து வந்த ஆண்டில் இடம்பெற்ற அனைத்து சுவிசேஷப்பணியின் விரிவாக்கத்திற்கும் தங்களது முழங்கால்களையும், கரங்களையும் தாராளமாய் ஒப்புக் கொடுத்தீர்கள், பிரயாசப்பட்டீர்கள், உங்கள் நாமங்கள் ஜீவ புஸ்தகத்தில் இடம்பெற்றுள்ளது! நீங்கள் நித்திய கனத்திற்குப் பாத்திரவான்கள், உங்கள் மூலம் மனந்திரும்பிய ஒவ்வொரு பாவியினிமித்தம் பரலோகம்

மகிழ்கின்றது, புதிய திருச்சபைகள் மலர்கின்றது, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமம் மகிமைப்படுகிறது, அல்லேலூயா!

2019 ஜனவரி துவக்கம் இதுவரை 322 மக்கள் இனங்கள் நடுவில், 1604 பணித்தளங்களில் முதன் முறையாக இயேசுவை ஆர்வமுடன் நாடிய 8 இலட்சத்து 46 ஆயிரம் ஆத்துமாக்களுக்காக, 6731 வேதபாட வகுப்புகளில் கிரமமாகக் கற்றுவரும் 1,14,445 விசுவாசிகளுக்காக, பத்து மாதங்களில் திருமுழுக்கு பெற்ற 6810 புது சிருஷ்டிகளுக்காக, கிறிஸ்துவில் மனமாற்றம் பெற்று விசுவாசத்தைத் திருமுழுக்கின் மூலம் பிரகடனப்படுத்த ஆயத்தப்படும் 10,857 பேருக்காக, இதுவரை 8326 கிராமங்களில் இடம்பெற்று வரும் சுவிசேஷ நற்செய்திப் பணிகளுக்காகக் கர்த்தரை நன்றியுடன் ஸ்தோத்திரியுங்கள். உங்கள் யாவருடைய ஜெபங்களுக்கும், அன்பின் ஈகைகளுக்கும் மிகுந்த நன்றியைத் தெரிவிக்கிறோம், கர்த்தர் உங்களை மிகவும் ஆசீர்வதிப்பாராக.

இந்நிதியாண்டின் நிறைவு காலாண்டுப் பகுதி:

2020 மார்ச் 31ல் நிறைவுபெற இருக்கும் இந்நிதியாண்டின் எஞ்சிய மாதங்கள் மிக முக்கியமானவைகள். முன்னேற்றப்பணி மற்றும் பணித்தளப் பணிகளைத் தீவிரப்படுத்தி இலக்கை எட்டிப்பிடிக்க அதிகம் பிரயாசப்படும் மாதங்கள். நம்முடைய ஜெப நேரங்களை இன்னும் இரட்டிப்பாக்க வேண்டிய நாட்கள். தன்னார்வப் பிரதிநிதிகளும் உடன் ஊழியர்களும் தேனீக்களைப் போல விறுவிறுப்பாகச் செயல்படவேண்டிய காலமிது. சேமிப்புப் பெட்டி பங்காளர்கள் தங்களது தியாக காணிக்கைகளை உரிய நேரத்தில் சமர்ப்பிக்கும் தருணமிது. கிராம நற்செய்திப்பணியாளர்களைத் தாங்கி ஆதரிப்போர் தங்களது மாதாந்திரக் காணிக்கைகளைக் கிறிஸ்மஸ் வெகுமதியுடன் இரட்டிப்பாகப் பகிர்ந்து கொடுக்கும் மாதமிது. சிறப்பு நன்கொடையாளர்கள் தங்களது முதலீடுகளை ''பரலோகப் பணிக்கு'' அர்ப்பணிக்கும் சமயமிது. பணித்தளப் பணியாளர்கள் தீவிரமாய் ஓடிச்சென்று சத்துருவின் பிடியிலுள்ளோரை மீட்டெடுக்கும் பணியைத் தைரியத்துடன் நிறைவேற்றும் போர்க்காலம் இது. புதிய விசுவாசிகளால் திருச்சபைகள் பூத்துக் குலுங்கி கர்த்தரை ஆராதிக்கும் மகிழ்ச்சியின் சத்தம் எங்கும் தொனிக்கும் நேரமிது. இது உங்கள் கண்ணீரின் பிரயாசத்தின் பலன்களை அறுவடை செய்யும் வாய்ப்புள்ள காலம்! தீவிரமாய்ச் செயல்படுவோம் வாரீர்!

புத்தாண்டு 2020ல் நமது தரிசனம் துரிதப்பட ஜெபியுங்கள்:

இந்தியாவின் ஒரு இலட்சம் கிராமங்கள் விஷ்வவாணி நற்செய்திபணியின் மூலம் கிறிஸ்துவில் சுபிட்சம் பெறவேண்டும் என்கிற தரிசனத்துடன் செயல்பட்டு வருகிறோம். இருப்பினும், வேலையின் பிரமாண்டம், நிறைவேற்றுவதில் தாமதம், நமது பொருளாதார பெரும் தேவை மேலும் பற்பல காரணங்களினிமித்தமும் பணியில் நாம் எதிர்நோக்கிய வளர்ச்சி யின் வேகம் பாதிக்கப்பட்டுள்ளது. சூழ்நிலைகள் சாதகமானாலும், பாதகமானாலும் தரிசன எட்டுகளில் மேலும் முன்னேறிச் செல்ல போதிய காலங்களும், உங்கள் பாரமான ஜெபங்களையும் அவசியம் எதிர் பார்க்கிறோம். நிர்வாகக் குழுவாக இதுபற்றி கலந்தாலோசித்து ஜெபத்துடன் தகுந்த தீர்மானம் எடுக்க இருக்கிறோம்.

ரோமர் 10:14,15 வசனங்களின்படி ஐந்து விதமான செயல்பாடுகளில் ஈடுபடுகிறவர்களுக்காக நாம் ஜெபிக்கவேண்டும்.

அனுப்புகிறவர்கள்: நற்செய்திப்பணியில் முதல் நிலையில் இருக்கிறவர்கள் ‘‘ஊழியர்களை அறுவடைப் பணிக்கு’’ ஜெபத்துடன் பொருளாதார உதவி செய்து அனுப்பும் பணிப்பங்காளர்கள், அவர்தம் குடும்பங்கள், கையின் பிரயாசங்கள் ஆசீர்வதிக்கப்படவும், நற்சுகத்துடன் தகுந்த கிறிஸ்தவ சாட்சியுள்ள வாழ்வுடன் நற்செய்திப் பணிகளுக்குத் தியாகத்துடன் தொடர்ந்து கொடுப்பதற்கும் தேவன் கிருபை அருள ஜெபியுங்கள்.

பிரசங்கிப்பவர்கள்: தன் சொந்த இன மக்களை கிறிஸ்துவின் மந்தையில் இணைக்க இரவு பகலாகப் பிரயாசம் எடுப்பவராக – கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை மாத்திரம் மையமாகக் கொண்டு வேத வசனங்களைப் பிரசங்கிப்பவராக – சுவிசேஷப் பணியின் போது எழும் வீண் தர்க்கங்களைத் தவிர்த்து, தாழ்மையுடன் சேவைபுரியும் மனப்பான்மையுள்ளவராக – பணித்தளங்களில் திரளான ஆத்துமக் கனிகள் கிடைக்க எதிர்ப்புகளைக் கண்டு பின்வாங்காதவராக இருக்கவும் எதிர்பாராத வியாதி, விபத்து, மரணம் ஊழியர்கள் குடும்பத்தைப் பாதிக்காதிருக்கவும் ஜெபியுங்கள்.

கேட்கிறவர்கள்: பல சூழ்நிலைகளின் மத்தியில் ஜீவ வசனங்களைக் கேட்கிறவர்கள் தங்கள் இருதயங்களில் விசுவாசிக்கவும், அற்புதங்கள் அடையாளங்கள் மூலம் அவர்களின் முழுக் குடும்பமும் பிசாசின் கட்டுகளிலிருந்து மீட்படையவும், அவர்களது ஆவிக்குரிய கண்கள் திறக்கப்பட்டு அவரது உள்ளமும் இல்லமும் கிறிஸ்து பிரகாசிக்கும் இடமாகும்படி மன்றாடி ஜெபிக்க வேண்டும்.

விசுவாசிக்கிறவர்கள்: கிறிஸ்துவில் புதிய விசுவாசிகள் வேத வசன போதனையில் வேரூன்றவும், பிரச்சனைகள் – சவால்கள் மத்தியில் கிறிஸ்துவில் நிலைத்திருந்து கனிகொடுக்கவும், குடும்பத்தினர் மற்றும் சமுதாய சூழ்நிலையில் தைரியத்துடனும், நல்ல சாட்சியுடனும் வாழவும் ஊக்கமாய் ஜெபியுங்கள்.

தொழுதுகொள்ளுகிறவர்கள்: திருமுழுக்கு பெறும் புதிய விசுவாசிகள், திருப்பந்தியின் மூலம் திருச்சபை ஆராதனைகளில் தொடர்ச்சியாகக் கலந்து கொண்டு கர்த்தரை ஆராதிக்கவும், திருப்பணிகளுக்குத் தியாகமாகக் கொடுப்பதற்கும், இயேசுவை அறியாத மற்றவர்களுக்கும் நற்செய்தி அறிவித்து சீஷத்துவப் பணிகளை நிறைவேற்ற ஆவிக்குரிய முதிர்ச்சியுள்ளவர்களாக வலுப்பெறவும் தொடர்ந்து ஜெபியுங்கள்.

2020ல் நிறைவேற்றவேண்டிய நமது இலக்கு:

– இரண்டாயிரம் புதிய ஊழியர்களுக்குப் பயிற்சி!

– பத்தாயிரம் புதிய கிராமங்களில் சுவிசேஷ தீபம்!

– பத்தாயிரம் தாங்கும் ஜெபக் குழுக்கள், திருச்சபைகள்!

– ஆயிரம் தன்னார்வப் பிரதிநிதிகள் மூலம் ஊழிய அபிவிருத்தி!

– ஒவ்வொரு மாதமும் ஊழியத்திற்கான தேவைகள் சுமார் 6.5 கோடிகள்!

– மாதம் குறைந்தது 12 தளங்களில் ஆலயப் பிரதிஷ்டை ஆராதனைகள்!

– 2841 ஆராதனை குழுக்களும் மாதந்தோறும் திருமுழுக்கு வைபவம் காண ஜெபியுங்கள்!

வாழ்த்துகிறேன், நன்றிசெலுத்துகிறேன்:

இயேசுவை ஒருமுறைகூட அறியாத இந்திய தேசக் கிராமங்களில் சுவிசேஷ தீபம் ஏற்றிட, ஜெபம் மற்றும் ஆதரவுகளைத் தாராளமாய் வழங்கிய திருச்சபையின் போதகர்கள், மூப்பர்கள், விசுவாசிகள், உடன் ஊழியர்கள், பிரதிநிதிகள் யாவருடைய அன்பு, ஈடுபாடுகளை பாராட்டி, நிர்வாகக் குழு மற்றும் என் சார்பிலும் அன்புடன் வாழ்த்தி நன்றிகூறுகிறேன்.

20.10.2019 அன்று சென்னை Almighty God திருச்சபையில் செய்தி கொடுக்க வாய்ப்பு வழங்கிய பாஸ்டர். ஜோசப் ததேயுஸ் அவர்களுக்கும், அக்டோபர் 25,26,27 ஆகிய நாட்களில் விஷ்வவாணி மிஷனெரிக் கூடுகைகள் நடத்துவற்கு இடமளித்த மூலச்சல் CSI ஹாக்கர் நினைவு ஆலயத்தின் ஆயர் Rev. T. ஜான் பீற்றர் ஐயா அவர்களும், மிஷனெரிகளைப் பிரதிஷ்டை செய்த கண்ணனூர் CSI பாஸ்டரேட் சபை ஆயர் Rev.Y.லாறன்ஸ் ஐயா அவர்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கிறோம்.

அக்டோபர் 29 முதல் 31 வரை இமயமலையடிவாரம் – சிலிகுரியில் இடம்பெற்ற இமயமலை பிராந்திய ஜெப முகாமில் Rev. ரோஷன், Rev. அசானந்த் லிமா, Rev. பவுலஸ் பவார் ஆகிய நமது ஊழியத் தலைவர்கள் மற்றும் உடன் ஊழியர்கள், விசுவாசிகளோடு தேவன் அளித்த நேரங்கள் மிகுந்த ஆசீர்வாதமானது!

10.11.2019 அன்று சென்னை, போரூரில் உள்ள ஜீவனுள்ள கல் A.G. திருச்சபையில் தேவ செய்தி வழங்கவும் ஊழியத்தைப் பகிர்ந்துகொள்ளவும் சிறந்த வாய்ப்பளித்த Rev. ஜெயக்குமார் ஐயா அவர்களுக்கு மிகுந்த நன்றியைத் தெரிவிக்கிறேன். 17.11.2019 அன்று தூத்துக்குடி, தெர்மல் நகர் CSI திருச்சபையில் தேவச்செய்தியளிக்க தேவன் அநுக்கிரகம் செய்தார்; மிகுந்த ஆதரவு நல்கிய போதகர் Rev. ஜெயசிங் ஐயா அவர்களுக்கும் உபதேசியார் ஐயா அவர்களுக்கும் உளமார்ந்த நன்றிகள் உரித்தாகுக!

மேலும் தூத்துக்குடி மாவட்டத்தின் சார்பாக புதிய ஆண்டில் இயேசுவை அறியாத ஆயிரம் புதிய கிராமங்களுக்குச் சுதேச ஊழியர்களை அனுப்ப ஜெபத்துடன் தீவிரமான பணிகளைப் பிரதிநிதிகளும், ஊழியர்களும் இணைந்து நிறைவேற்றி வருகிறார்கள். அவர்களது முயற்சிகளைப் பெரிதும் பாராட்டுகிறேன். அத்துடன், ஊழியர்களுக்குக் கிறிஸ்மஸ் வெகுமதிகளைச் சேகரிப்பதற்காக அயராது உழைக்கும் அன்புப் பிரதிநிதிகள், ஊழியர்கள், உதாரத்துவமாய் அள்ளிக்கொடுத்துள்ள அனைத்துப் பணிப்பங்காளர்களை உளமார வாழ்த்தி நன்றி கூறுகிறேன்.

விஷ்வவாணியின் அனைத்துத் துறைகளிலும் அயராது பணிபுரியும் உடன் ஊழியர்கள், தளப் பணியாளர்கள், நிதி-நிர்வாகக் குழுவினரையும் நெட்வொர்க் ஊழியங்களின் தலைவர் P. செல்வராஜ் அண்ணனையும் நன்றியுடன் வாழ்த்துகிறேன். நம் இயக்கத்தின் ஸ்தாபகர் எமில் ஜெபசிங் அண்ணன் அவர்கள் வழிகாட்டிய தரிசனத் தடத்தில் நாமும் முன்னேறிச் சென்று இந்தியக் கிராமங்களைக் கிறிஸ்துவுக்காய் சுதந்தரிப்போமாக!

இதோ, திறந்த வாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன்,
அதை ஒருவனும் பூட்டமாட்டான். (வெளி. 3:8).

சென்னை — கிறிஸ்துவின் பணியில் உங்கள் சகோதரன்,
27.11.2019 — W. வில்சன் ஞானக்குமார்

2002 டிசம்பர் சமர்ப்பண் இதழுக்காக எமில் அண்ணன் அவர்களால் எழுதப்பட்ட சிறப்புக் கட்டுரை...

மற்ற ஒன்பது பேர் எங்கே?

பரிசுத்த மத்தேயு 7:7 கேளு! பரிசுத்த லூக்கா 17:17 நன்றிகூறு!
"“அப்பொழுது இயேசு: சுத்தமானவர்கள் பத்துப்பேர் அல்லவா,
மற்ற ஒன்பது பேர் எங்கே?”
கேட்பதற்கு ஓடிவந்தார்கள், பெற்றுக்கொள்வதற்கு விரைந்து வந்தார்கள்,
கேட்டதைப் பெற்ற பின்னர் மறைந்துபோனார்கள்!
இயேசுவின் கண்ணில் படுவதற்கு ஏங்கி நின்றவர்கள்,
பின்னர் மண்ணில் மறைந்துபோனார்கள்!

வாங்கும் கை, வந்தனம் தெரிவிக்கும் கையாக மாறவில்லை!
கேட்கும் வாய் துதிக்கும் உதடுகளை வெளிப்படுத்தவில்லை!
குழந்தையின் தோல் போல் மாறிய சரீரம்
மாற்றியவரின் பாதத்தில் காணிக்கையாகவில்லை!

பத்துப்பேர் – அனைவரும் குஷ்டரோகிகள்!
9 பேர் யூதர் – ஒரே ஒருவன் சமாரியன்!
யூதரும் சமாரியரும் ஒன்றாக வாழ்வதே இல்லை,
குஷ்டரோகம் அவர்களை இணைத்தது!

வியாதிகள், துன்பங்கள், யுத்தங்கள், பூமியதிர்ச்சிகள் என்று
மனிதனால் சமாளிக்க முடியாதவைகள் வரும்பொழுது
மனிதன் ஜாதிகளை மறப்பான், மதவாதங்களை மறப்பான்,
உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்பதையே மறப்பான்! மனிதன் இணைவான்!
ஆனால் வசதியாக வாழ்ந்தவுடன் பெரிய நாற்காலிகளைப் பெற்றவுடன்
கடவுளையும் மறப்பான், மற்றவர்களையும் மறப்பான்!
அவன் நினைவெல்லாம் அவனே!

பத்துப்பேர் ஓடிவந்தார்கள், பத்துப்பேரும் வாடி நின்றார்கள்!
தொழுநோயில் இருந்து விடுதலை கேட்டார்கள்!
இயேசுவின் முகத்தை எட்டிப் பார்த்து கேட்டார்கள்,
இயேசுவின் காலில் குப்புற விழுந்து கேட்டார்கள்!

“கேளுங்கள், பெற்றுக்கொள்வீர்கள்” என்பதே பரி. மத்தேயு 7:7
அதன் சரியான பொருள்: ‘கேட்டுக்கொண்டே இருங்கள்’ என்பதாகும்!

ஒரு நாள், ஒரு வாரம், ஒரு மாதம், ஒரு வருடம் கேட்டுவிட்டேன்,
என் ஜெபத்தைக் கர்த்தர் கேட்கவில்லை! சலித்துப்போய்விட்டது!
இனி ஜெபித்துப் பயன் என்ன? என்று
ஜெபிக்கும் பாய்களைச் சுருட்டியவர்கள் உண்டு!

அதே சமயம், சோர்ந்துபோகாமல், இடைவிடாமல் இரவும் பகலும்
உள்ளத்தில் ஏங்கியவர்களும் உண்டு!
உதட்டை ஜெபத்தினால் அசைத்துக்கொண்டே இருந்தவர்களும் உண்டு!
பரி. மத்தேயு 7:7 கேளு!

ஜெபத்தை இடையில் விட்டிருப்பாயானால்,
ஜெபித்துப் பயன் என்ன என்று மனம் குமுறியிருப்பாயானால்,
இதை வாசிக்கும் உனக்குக் கர்த்தர் கூறுவது:
மகனே, மகளே! ஜெபத்தைக் கேட்கிறவர், ஜெபத்திற்குப் பதில் கொடுக்கிறவர்
உன்னிடம் கேட்பது: ‘ஜெபித்துக்கொண்டே இரு’ என்பதே!
உன் பொறுமையைச் சோதிப்பதற்கு அல்ல, உன் விசுவாசத்தை வளர்ப்பதற்கு!
விடாமல் ஜெபிப்பவர்கள் இடம்கொள்ளாமல் பெற்றுக்கொள்வார்கள்!
கேட்டதற்கும், வேண்டிக்கொண்டதற்கும் அதிகமாகப் பெற்றுக்கொள்வார்கள்!
அதே சமயம், பெற்றுக்கொண்டவர்கள்
கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்த எதிர்பார்க்கப்படுகிறார்கள்!

மற்ற ஒன்பது பேர் எங்கே?

இயேசு பத்துப் பேரையும் எதிர்பார்த்தார்!
பத்துப் பேரும் நியாயப்பிரமாணம் கூறுவது போன்று
ஆசாரியருக்குத் தங்களைக் காண்பித்து,
ஊருக்கு வெளியே வாழ்ந்தவர் இனிமேல் ஊருக்கு உள்ளே வாழலாம்,
சுகம் பெற்றுவிட்டார்கள்’ என்ற நற்சான்றிதழ் பெற்று, அந்த நற்சான்றிதழை
முதலாவது இயேசுவிடம் காட்டுவதற்கு ஓடிவருவார்கள் என இயேசு எதிர்பார்த்தார்!

> நற்சான்றிதழ் கிடைத்தவுடன்
> அதனைப் பெற்றுக்கொள்வதற்குக் காரணமாக இருந்தவர் மறக்கப்பட்டார்!
> மெத்தையில் ஏறியவுடன் ஏணியைக் காலால் எட்டி உதைத்தார்கள்!
> ஏப்பம் போட்டவுடன் உணவைச் சமைத்துக்கொடுத்தவர்களை
> எட்டிக்கூட பார்க்கவில்லை!

ஒன்பது பேர் ஓடிப்போனார்கள்!
சுகம்பெறுவதற்கு இயேசுவை நோக்கி ஓடிப்போனார்கள்!
சுகம்பெற்ற பின்னர் இயேசுவை விட்டும் ஓடிப்போனார்கள்!

> இயேசுவை விட்டு ஓடிப்போகிறவர்கள் பின்னர் எதை நோக்கி ஓடிப்போவார்கள்?
> உலகம், மாமிசம், இச்சை! பிசாசு, பாவம், சிற்றின்பம்!

பத்துப்பேர் சுகம்பெற்றார்கள்! ஒன்பது பேர் யூதர்கள், ஒருவர் சமாரியர்!
ஒன்பது யூதர்களும் ஓடிப்போனார்கள், இச்சையில் விழுந்தார்கள்!

> தேவனை மகிமைப்படுத்துவதற்கு
> தேவப் பிரமாணங்களில் தேறியவர்கள் பின்தங்கினார்கள்!
> அந்நியன், சமாரியன் – முன்வந்தான்!
> பண்டிதர்கள் செய்யாததை படிக்காதவன் செய்தான்!

அவர்கள் வியாதி அவர்களை ஐக்கியப்படுத்தியது,
அவர்கள் சுகம் அவர்களைப் பிரித்துவிட்டது!
தரித்திரம் இணைக்கிறது, பணம் பிரிக்கின்றது!

> தூதர்கள் வாயிலிருந்து ஓயாத துதி இயேசுவுக்கு இன்றும் உண்டு!
> பாவ மனிதர்கள் வாயிலிருந்து இயேசுவுக்குத் துதி பிறக்கவில்லை!

இயற்கை அனைத்தும் சிருஷ்டி கர்த்தாவைப் போற்றுகின்றது!
இயற்கையின் நிழலில் அடைக்கலம் பெற்றவன் வாயில்
சிருஷ்டி கர்த்தாவுக்கு இடம் இல்லை!

கொடுத்தவரை நினைக்காதவர்கள் கொடூரமானவர்கள்!
உயர்த்தியவரை உயர்த்தாதவர்கள் அரக்கர்கள்!
துதி அழியும்போது அனைத்தும் அழியும்! பத்துப்பேர் அழுகி அழியப் போனார்கள்!
இயேசுவோ அவர்களை அணுகி, அழகாக்கி, ஆசாரியரிடம் அனுப்பிவைத்தார்!
சுகம் அழகு வசந்தம் வாய்ப்பு சிரிப்பு என்று பத்துப் பேரும் வாழ்க்கை கண்டார்கள்!
அதனைக் கொடுத்தவரை ஒருவன் தவிர ஒன்பது பேர் மறந்தார்கள்!

'இயேசு' என்ற நாமத்தை மறப்பவர்கள், மறுப்பவர்கள் வெட்கிப்போவார்கள்
என்பதே பரிசுத்த வேதம்! ஆம், சுகம் பெற்ற ஒன்பது பேரும் வெட்கிப்போனார்கள்!
சுகம்பெறுவதற்கு முன் எப்படி வெட்கி நாணி ஊருக்கு வெளியே
தங்களை மூடிக்கொண்டு வாழ்ந்தார்களோ அதே நிலையை மறுபடியும் பெற்றார்கள்
என்பதை பிரபல வேதப் பண்டிதர் கூறியுள்ளார்!

சரித்திரத்தின்படி பத்துப்பேரில் ஸ்தோத்திரிப்பதற்கு மறந்துபோன ஒன்பது பேர்
பெற்ற சுகத்தை இழந்தார்கள்!

நாய்கள் வாலாட்டுகின்றன, நாம் கை கூப்புகிறோம்!
காலையில் காக்கைகள் கரைந்து துதிக்கின்றன, நாம் கண்ணீரில் துதிக்கிறோம்!
அலைகள் இரைந்து துதிக்கின்றன, நாம் மனம் உடைந்து துதிக்கிறோம்!

துதி, துதி! ஸ்தோத்திரி! நீ பெற்றதை இழப்பதே இல்லை!
மேலும் மேலும் இடம்கொள்ளாமல் போகும் மட்டும் பெறுவாய்!

103வது சங்கீதத்தின் முதல் 5 வசனங்களையும் பாராமல் படி!
காலையில் எழும்பியது முதல் இரவில் தூங்கப்போகும் வரை
அந்த 5 வசனங்களையும் மனதில் சொல்லிக்கொண்டே இரு!
வரவுகள் வந்துகொண்டே இருக்கும்!
இருதயத்தின் நல் விருப்பங்கள் நிறைவேறிக்கொண்டே இருக்கும்!

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு ஜாதி, சமயம் இல்லை!
மத வேற்றுமைகள் இல்லை, முகம், நிறம் பார்ப்பது இல்லை!
யார் கேட்டாலும் – இயேசுவின் நாமத்தில் யார் ஜெபித்தாலும்
கொடுப்பார், கொடுத்துக்கொண்டே இருப்பார்!

ஆனால் பெற்றுக்கொண்டவுடன் இயேசு கிறிஸ்துவுக்கு
நன்றியுள்ளவர்களாக ஜீவிக்காவிட்டால் பெற்றவைகள் ஒன்று ஒன்றாக இழக்கப்படும்!
பத்து குஷ்டரோகிகள் சுகம்பெற்றனர்! ஒரே ஒருவர் சுகம் மட்டும் நீடித்தது!
மற்ற ஒன்பது பேர் மறுபடியும் குஷ்டரோகம் கண்டார்கள்!
காரணம் – அந்த ஒன்பது பேர் இயேசுவின் காலடிகளில் வந்து விழவில்லை!
இயேசுவின் எதிர்பார்ப்பை நிறைவேற்றவில்லை!

மனம்போல் வாழ்வதற்கு இயேசு நன்மைகளைக் கொடுப்பதே இல்லை!
இஷ்டம்போல் திரிவதற்கு இயேசுவின் சலுகைகள் கிட்டுவதே இல்லை!
இயேசுவைத் துதிப்பவர்கள் இழப்பது இல்லை!
இயேசுவைத் துதியாதவர்கள் நிலைப்பதும் இல்லை!
"என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி;
என் முழு உள்ளமே – அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்திரி;
என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி;
அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே!"

ஓர் பிரார்த்தனை

ஆண்டவரும் இரட்சகருமாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே
தம்மைத் துதிக்க மறந்த நாட்களில் வாயில் பிறந்தது ஸ்தோத்திரங்கள் அல்ல, கோபங்களே!
மனம் கண்டது மகிழ்ச்சியல்ல, துக்கங்களே!
உள்ளம் நொறுங்கிய வேளையில்
தவற்றை உணர்ந்து அறிக்கையிட்டுத் தம்மைப் போற்றிய வேளையில் நான் பெற்றது —
இழந்தது அனைத்தையும் திரும்பவும் கண்டதே! குடும்பம் கண்டது சந்தோஷம், சமாதானமே!
துதிகளின் நடுவில் வாசம் செய்கிறவரே,
என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைப் பின்தொடர
என் ஜீவனுள்ள நாள் வரை என் இருதயம் தம்மை ஆராதிக்கும்!
என் வாய் கர்த்தரை ஸ்தோத்திரிக்கும்! என் பாத்திரம் நிரம்பி வழியும்!
இம்மட்டும் மன்னித்தவரே நன்றி! நித்தியம் வரை எனக்குப் பொறுப்பெடுத்தவரே ஸ்தோத்திரம்!
எல்லா துதிக்கும் எல்லாப் புகழ்ச்சிக்கும் கனத்திற்கும் மகிமைக்கும் உரியவரான
கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் துதி ஸ்தோத்திரம், ஆமென்.

உணர்ந்துகொள்!

உன் யூகத்தினால் நீ உற்பத்தியாகவில்லை,
தேவ கிருபையினால் ஒரு நாள் பிறந்தாய் – உணர்ந்துகொள்!
உன் நாடி துடிப்பதும் இதயம் அடிப்பதும்
உன் சாமர்த்தியத்தினால் அல்ல, தேவ கிருபையினால் – உணர்ந்துகொள்!
இதுவரை நீ செய்த பாவங்கள் துரோகங்கள் மலைபோல் வளர்ந்தன,
இன்று நீ உயிரோடு இருப்பது தேவ கிருபை, இரக்கம், தயவு – உணர்ந்துகொள்!
உணர்ந்தவர்கள் இயேசுவை நோக்கிப் பார்ப்பார்கள்,
தேவ கோபத்திற்குத் தப்பிப் பிழைப்பார்கள்!
வாழ்நாள் முழுவதும் கர்த்தரைத் துதிப்பார்கள்!

என் ஆத்துமாவே! என் முழு உள்ளமே!

என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி
என்னை அவரது கிருபை சூழ்வதினால் ஸ்தோத்திரி!
கர்த்தர் பணி செய் – உன் வாழ்விலே வெற்றி வாகை
கர்த்தரின் வார்த்தை எடுத்து செல் – உன் பணியிலே உவகை!
இயேசுவுக்காய் உழைத்தால் பாக்கியம்
இயேசுவோடு வாழ்ந்தால் சிலாக்கியம்!
புதிய நாட்களைச் செலவிடு தேவ பணியில் மகிழ்ச்சியுடன்
புதுமைகள் படைத்து சிகரம் தொடு மாட்சியுடன்!
சுமந்துசெல் இயேசுவை உன் காலமெல்லாம்
சுவிசேஷம் சொல் இந்த ஞாலமெல்லாம்!
ஆத்தும அரிக்கட்டுகளை கிறிஸ்துவின் சபையில் சேர்த்திடும்
அதி உன்னத பணி, கர்த்தரை ஸ்தோத்திரிப்போரின் பணி!
அவர்களின்...
உதடுகள் சங்கீதம் பொழியும்
உள்ளம் சந்தோஷத்தில் வழியும்! – திருமதி. ரதி ஆசீர், மதுரை–16.

சின்னச்சின்ன உணர்வுகள்...

அடையாளம்!

பளிச்சென்று சூரியன் பிரகாசித்த ஒரு காலை வேளையில் உயர்ந்து கிடந்த அந்த மலை மேலே புகைப்பட கருவிகளோடு ஏறத் துவங்கினோம். எங்களது பயணம் ஒரு சிறப்பான குறிக்கோளுக்கானது. அதே சமயம் ஆபத்துகள் நிறைந்தது என்றும் எங்களுக்கு முன் அறிவிக்கப்பட்டது. ஏற்கனவே காடு மலை ஏறிய அனுபவம் இருப்பதால் அதற்கான பயிற்சியும் இருந்ததால் அதை பற்றி எல்லாம் கவலை இல்லாமல் நடையைக் கட்டினோம்.

இயற்கை, தூரத்திலிருந்து பார்ப்பதற்கு எப்போதுமே அழகாகவும் அதை நெருங்க நெருங்க மிரட்டுவதாகவும் இருக்கும். கடற்கரையில் கால் நனைத்துக் கொண்டிருக்கும் போது கடல் மென்மையாகத்தான் இருக்கும். அதே கடலுக்குள் ஆழ்கடல் மீன்பிடி படகுகளில் ஏறிச் சென்றால் பழகியவர்கள் தவிர மற்றவர்களுக்கு கதி கலங்கும். கொஞ்சம் தவறி கடலுக்குள் விழுந்து தத்தளித்தோம் என்றால் உயிரே ஊசலாடி விடும்!

மலைகளும் காடுகளும் கூட அப்படித்தான் தூரத்திலிருந்து பார்ப்பதற்கு அழகாகவும் அதனுள்ளே ஏற ஏற திகில் கலந்த ஒருவித பயத்தை அளிப்பதாகவே இருக்கும்.

காட்டு வாசனை, ஓடைகளின் சலசலப்பு, சிங்கவால் குரங்குகளின் அட்டகாசம், என கடவுளின் படைப்பில் ஒவ்வொரு அணுவையும் ரசித்துக் கொண்டே அந்த கடினமான பயணம் நகர்ந்துகொண்டே இருந்தது. 13 கிலோ மீட்டர்களுக்கு மேல் மலையில் கிட்டத்தட்ட செங்குத்தாக ஏறியாகவேண்டும். சில கிலோமீட்டர்கள் ஏறியதும் கைகால்கள் எல்லாம் நடுங்க ஆரம்பித்தது. அப்படித்தான் இருக்கும் ஆரம்பத்தில்! ஆனால் அதை சமாளித்து கொண்டு போனால் இலக்கை அடைந்து விடலாம் என்பது எல்லோருக்குமே தெரியும். தெளிந்த நீரோடையின் தண்ணீரை பருகிக் கொண்டும் அள்ளி முகத்தில் வீசிக்கொண்டும் தலையை நனைத்துக்கொண்டு நிற்காமல் பயணம் சென்று கொண்டே இருந்தது.

குறிப்பிட்ட இடம் வந்ததும் அழைத்துக் கொண்டு போன வழிகாட்டி எங்களை நிற்கச் சொன்னார். சற்றே பாதுகாப்பான இடம் போல அது தெரிந்தது. கையில் வைத்திருந்த காலை உணவு பொட்டலங்களை பிரித்துக் கொடுத்தார். ஆனைப் பசிக்கு அவல் பொரி போல அத்தனை பேரும் அதை பதம் பார்த்த பின்பு ஒரு சிறிய ஓய்வு தரப்பட்டது. சுற்றிலும் இருந்த மரங்களை நோட்டமிடுவதற்காக நான் கண்களை சுழல விட்ட போது ஒரு மரத்தினுடைய பட்டை அப்போதுதான் உரிக்கப் பட்டிருந்தது.

வழிகாட்டியை நான் வினவினபோது அந்த மரம் சாப்பிடுவதற்கு உகந்ததா என்பதை இப்போதுதான் ஒரு யானை சோதித்து பார்த்திருக்கின்றது என்று சொன்னார். அப்படி என்றால் யானை இங்கேதானே நிற்கும் என்று கேட்ட போது ‘‘நிச்சயமாக’’ என்று பதிலளித்தார். இன்னும் பல மரங்களை ஆர்வத்தோடு உற்று நோக்கியபோது பல அடையாளங்களும் நகத் தடயங்களும், காயப்படுத்துதல்களும் இருந்தது. நக அடையாளங்களை காட்டியபோது விலங்குகள் சில நேரங்களில் தங்களுடைய பகுதிகளை இப்படி அடையாளப்படுத்தி வைத்திருக்கும், மீண்டும் இந்த இடங்களுக்கு வருவதற்கு அவைகளுக்கு அது உபயோகமாக இருக்கும் என்று சொன்னார். எனக்கு அது ஆச்சரியமாகவும் வினோதமாகவும் இருந்தது.

அவர் சொன்ன ‘அடையாளம்’ என்ற வார்த்தை ஒளிக் கீற்றாய் என்னுடைய மனதில் பதிந்துவிட்டது. **“அடையாளம்!”**

மனிதர்களுக்கும் அடையாளங்கள் தேவைப்படுகின்றது. பல நேரங்களில் எங்கே போகிறோம் என்பதற்கு சில எல்லைக் கற்கள் நமக்குத் தேவைப் படுகின்றது. வழி சந்திகளில் ஊர்களை அடையாளப்படுத்தும் பலகைகள் இல்லை என்றால் பிரயாணங்கள் சிரமமாகி விடுகிறது. நான் யார் என்ற பிரத்தியேக அடையாளம் ஒரு தரிசனமாகவோ அல்லது நோக்கமாகவோ நம்மால் புரிந்து கொள்ளப்படும் வரை நம்முடைய வாழ்க்கை அங்கும் இங்கும் காற்றினால் பறக்கும் பதர் போலத்தான் இருக்கிறது.

அடையாளச் சிக்கல் இருக்கும் எத்தனை மனிதர்களை ஒவ்வொரு நாளும் சந்திக்கிறோம். விலையேறப்பெற்ற ஊழியத்தை விட்டு விட்டு மதிப்பையும் மரியாதையும் அடையாளத்தையும் அங்கீகாரத்தையும் கனத்தையும் நாடும் மனிதர்களை எல்லாம் பார்க்கும் போது ''அவர்களை அவர்களுக்கு அடையாளப்படுத்தும் ஆண்டவரே, அவர்களது தரிசனத்தை அவர்கள் உணரச் செய்யும்'' என்று தான் ஜெபிக்க தோன்றுகிறது.

ஆதி மனிதன் ஏதேனில் அத்துமீறி செய்த பாவத்திற்கு தண்டனையாக கிடைத்தது வெட்கம், அவமானம், வியர்வை, மூப்பு, மரணம், கண்ணீர் என்பவைகளே! இவை எல்லாவற்றையும் விட பிரதானமான தண்டனை என்னவெனில் ''தேவ தொடர்பு இழப்பு'' என்பதாகும்! அதுவரை ஒரு நண்பனைப் போல கடவுளிடம் பேசிக்கொண்டிருந்த மனிதனுக்கு அவன் செய்த பாவத்தின் பலனாக வந்த பயத்தினால் அவரை எதிர்கொள்ள முடியவில்லை! ஓடி ஓடி ஒளிய வேண்டியதாயிற்று! ஆனால் தேவன் அந்த தொடர்பை இழப்பதற்கு தயாராக இல்லை. தான் படைத்த தன்னுடைய அழகிய மனிதர்கள் தன்னுடைய மார்பில் குத்தினபோதும் அவர்களை நேசித்தார்! அதுதான் தகப்பனுடைய இருதயம்! அதுதான் பிதாவின் அளவற்ற அன்பு!

நெருக்கமான உறவு வேண்டாம், ஆனால் சற்று தள்ளி வைத்து அவனைப் பார்த்துக் கொள்வோம் என்று அவர் நினைத்திருக்கலாம்! உடனடி தண்டனையாக ஆதாமுக்கு வியர்வையை கொடுக்கிறார்; உழைத்து, வலித்து நீ சாப்பிடு என்று! பிள்ளைப் பேற்றின் போது உருவாகும் தாங்க முடியாத வேதனையால் தான் உன்னுடைய குடும்பம் விருத்தியாக முடியும் என்கின்ற தண்டனையை ஏவாளுக்கு கொடுத்து விடுகிறார்!

ஆனாலும் அவர் அன்புள்ளவர்; இரக்கம் மிகுந்த அவர், தான் படைத்த மனிதர்களை அளவுக்கு அதிகமாக நேசிக்கிறார்!

காயீனோடு அவர் போராடுகிறார். அவன் என்னை கண்டு பிடிக்கிறவன் எவனும் என்னை கொன்று போடுவானே என்ற போது அவர் நெற்றியிலே ஒரு அடையாளத்தை போடுகிறார். அது ஒரு பாதுகாப்பின் அடையாளம்!

உலகம் முழுவதும் தண்ணீரினால் அழிக்கப்பட்டுவிட்டது நோவாவின் குடும்பத்தை தவிர! நன்றிக் காணிக்கை பலிகளை நோவா செலுத்துகிறார்! கடவுளின் இருதயம் உருகுகிறது. தன்னுடைய உடன்படிக்கையின் வானவில்லை அடையாளமாக காட்டுகிறார். இந்த உலகம் இனி தண்ணீரினால் அழிக்கப்படுவதில்லை, இப்படி ஒரு பேராபத்து மனுக்குலத்திற்கு இனி நிகழப் போவதில்லை என்று காட்டி விடுகிறார்!

பின்பதாக ஆபிரகாமை அழைத்து, விருத்தசேதனம் செய்யச்சொல்கிறார். தனக்கும் தான் தெரிந்து கொண்ட மக்களுக்குமான உடன்படிக்கையின் அடையாளமாக அது இருக்கும் என்று அவர் சொல்கிறார்.

பஞ்சம் பிழைக்க எகிப்திற்கு போன இடத்தில் அவர்கள் பெரிய ஜாதியாக பலுகிப் பெருக, அவர்களை அறியாத பார்வோன் எழும்பி அவர்களைக் ஒடுக்க ஆரம்பித்தபோது தேவன் அவர்களை மோசேயின் தலைமையில் விடுதலை செய்ய தீர்மானிக்கிறார். பார்வோனின் முன்பதாக அற்புதங்களையே அடையாளங்களாக ஆக்குகிறார்.

அவர்கள் புறப்பட்ட அந்த நாளுக்கு முந்தைய நாள் இரவில் ரத்த அடையாளத்தை நிலைக்கால்களில் பூசுவதற்கு அறிவுரை சொல்கிறார்! ஆம் ரத்தம் மீட்பின் அடையாளம்!

இப்படி தொடர்பு இழந்த மனுக்குலத்தின் மீது அன்பின் தேவன் அடையாளங்களை கொடுத்து, தன் மக்களை தன் மீது திரும்பச் செய்து கொண்டே இருந்தார். வேதப்புத்தகம் முழுவதுமே ஆதி முதல் அந்தம் வரை மனிதர்கள் மனிதர்களுக்கு கொடுத்த அடையாளங்களாலும், தேவன் மனிதனுக்கு கொடுத்த அடையாளங்களாலும் மனிதர்கள் தேவனிடம் கேட்ட அடையாளங்களாலும் நிறைந்து கிடக்கின்றன.

குவிந்துகிடக்கும் இவ்வடையாளங்களில், பெரும் உடன்படிக்கைகளில், தொடர்ந்த வழிகாட்டுதல்களில் மிக முக்கியமானது எது அல்லது பிரதானமானது எது அல்லது அடையாளங்களில் ஓங்கித்தெரிவது எது என்று ஒரு கேள்வியை போட்டால், பனி படர்ந்து கிடக்கும் இவ்வுலகத்தின் அனைத்து மலைகளிலும் மகாராஜா போல நிமிர்ந்து நிற்கும் இமயமலை போன்று வேத புத்தகத்தில் ஒரு இடம் தெரிகின்றது! அது எந்த இடம்? சிந்தியுங்கள்!

அவ்விடத்தில் மனிதன் கடவுளிடம் ஓர் அடையாளத்தை கேட்கவில்லை கடவுளும் மனிதனிடத்தில் ஓர் அடையாளத்தை கேட்கவில்லை! மாறாக கடவுளே தன்னிடம் ஒரு அடையாளத்தை மனிதனிடம் கேட்கும்படி அறிவுறுத்துகிறார். அந்த மனிதன் கேட்க தயங்குகிறான். நான் தேவனாகிய கர்த்தரை பரீட்சை பார்ப்பதில்லை என்று பதறுகிறான்!

ஆண்டவரின் நேரடி ஆட்சி, அவரை தெரிந்துகொண்ட மக்களுக்கு இருந்த போது, அவர்கள் எங்களுக்கு இது தேவையில்லை, எல்லாரையும் போல எங்களுக்கும் அரசனை தாரும் என்று கேட்டுக்கொண்டபோது, சவுல் என்கின்ற உயர்ந்த மனிதனை முதல் மன்னனாக அவர்களுக்குக் கொடுத்தார். ஆனால் சவுல் பின்பதாக தன்னுடைய கிரியைகளினால் தாழ்த்தப்பட்டு, அவனுக்கு பின் வந்த இஸ்ரவேலின் பாடலரசன் தாவீதின் வசமாகிறது தேசம்! கடவுளின் இதயத்திற்கு ஏற்ற தாவீது ஒருங்கிணைந்த மாபெரும் இஸ்ரவேல் சாம்ராஜ்யத்தை கட்டி ஆட்சிசெய்தார். அவரது புத்திரன் சாலொமோன் காலத்திலும் ஆட்சி தொடர்ந்தது. பின்பதாக ராஜாங்கம் இரண்டாக உடைகிறது. இஸ்ரவேல், யூதா என இரண்டு பெரும் ராஜ்யங்களாக தேவனுடைய மக்கள் பிரிந்துபோனபோது அவர்களின் பெரும்பான்மையான ராஜாக்கள் மோசமானவர்களாகவும் சிலை வழிபாடு உடையவர்களாகவும் தேவனுடைய ஜனங்களை பிசாசுக்கு நேராக திருப்புகிறவர்களாகவும் மாறிவிட்டார்கள்.

அப்போதுதான் யூத குலத்தில் – தாவீதின் வம்சத்தில் தோன்றிய ஆகாஸ் என்னும் யூதா தேசத்து ராஜாவின் நாட்களிலே, ரேத்சீன் என்னும் சீரியாவின் ராஜாவும், ரெமலியாவின் குமாரனாகிய பெக்கா என்னும் இஸ்ரவேலின் ராஜாவும் எருசலேமின்மேல் யுத்தம்பண்ண வந்தார்கள், அவர்களால் அதைப் பிடிக்கக்கூடாமற் போயிற்று.

இச்சூழ்நிலையில் சீரியர் எப்பிராயீமை சார்ந்திருக்கிறார்கள் என்னும் செய்தி தாவீதின் குடும்பத்துக்கு அறிவிக்கப்பட்டபோது, ராஜாவின் இருதயமும் அவன் ஜனத்தின் இருதயமும் காட்டிலுள்ள மரங்கள் காற்றினால் அசைகிறதுபோல்

அசைந்தது. தாங்கள் முற்றிலும் அழிக்கப்பட்டு விடுவோமோ என்று தாவீதின் சந்ததியார் பயந்த போது, கர்த்தர் ஆகாசை நோக்கி கேட்கிறார்

''நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் ஒரு அடையாளத்தை வேண்டிக்கொள், அதை ஆழத்திலிருந்தாகிலும், உன்னதத்திலிருந்தாகிலும் உண்டாகக் கேட்டுக்கொள் என்று! ஆகாசோ: நான் கேட்கமாட்டேன், நான் கர்த்தரைப் பரீட்சை செய்யமாட்டேன் என்றான்.''

அப்போதுதான் வேதப் புத்தகத்தில் மாபெரும் அடையாளத்தை ஏசாயாவின் வாய் மூலமாக தேவன் ஆகாசுக்குக் வெளிப்படுத்துகிறார்,

> ''ஆதலால் ஆண்டவர் தாமே உங்களுக்கு ஒரு அடையாளத்தைக் கொடுப்பார்; இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாள்''. ஏசாயா 7:14.

கடவுளால் மனுக்குலத்திற்கு கொடுக்கப்பட்ட மாபெரும் அடையாளம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து! மற்ற அடையாளங்கள் எல்லாம் உயிரற்றவை ஆனால் ரத்தமும் சதையுமாக ஒரு அடையாளம் மனுக்குலத்திற்கு தேவனால் கொடுக்கப்பட்டது என்றால் அதுதான் இயேசு என்னும் ஒப்பற்ற அடையாளம்! விலை வைக்க முடியாத மாபெரும் பரிசு!

ஏதேனில் சிதைந்த உறவை பெத்லகேமிலே தொடங்கப் பிறந்தவர்! கல்வாரியின் மேட்டினில் பூரணமாக இணைத்து வைத்தவர்! அவரின் பிள்ளைகளாக மாறுவதுதான் இவ்வுலகத்தின் பெரும் சிலாக்கியம்! அந்தச் சிலாக்கியத்திற்கு உட்படாத யாவரையும் அந்தப் பெரும் ஆசீர்வாதத்திற்குள் கொண்டுவருவது தான் மிஷனெரிப் பணி!

முதல் வருகைக்கான அடையாளத்தை நிச்சயித்த அதே கர்த்தர் இரண்டாம் வருகைக்கான அடையாளங்களையும் தன்னுடைய புத்தகத்தில் விலாவாரியாக எழுதி கொடுத்து விட்டார்.

அவ்வடையாளங்கள் இப்போது தோன்ற ஆரம்பித்து இருக்கின்றன! வருகையின் அடையாளங்கள் பளிச்சென்று தெரிகின்ற இந்த கடைசி காலத்தில் அதிவேக மிஷனெரி பணிக்கு நாம் ஆயத்தப்படுவோம்!

உங்கள் அத்தனை பேருக்கும் கிறிஸ்மஸ் புத்தாண்டு வாழ்த்துக்கள்!

– ஹாரிஸ் பிரேம், விஷ்வவாணி மீடியா

பயிற்சியில் வளர்ச்சி

''நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி'' (2 தீமோ. 2:2). வளரும் வட கிழக்கின் தளங்களில் வேர்விட்டு வளரும் சபைகள் மிகுந்த கனிகளைக் கர்த்தருக்குக் கொடுக்கத்தக்கதாக சிறந்த பயிற்சி பணித்தள ஊழியர்களுக்கு அளிக்கப்படுகின்றது. அனைத்து ஊழியர்களும் 'B.Min' என்ற இளநிலை வேதாகமக் கல்வியைக் கடந்து, ஊழியக் கிராமங்களில் அவர்களுக்குத் தோள்கொடுக்கும் மூப்பர்கள், சிறுகுழுத் தலைவர்களை உருவாக்குவதற்கும், தளம் ஒவ்வொன்றும் வேத கலாசாலையாகத் திகழ்வதற்கும் தெளிவான பாடத்திட்டங்கள் கற்பிக்கப்படுகின்றன! திரிபுரா, இமயமலையடிவார ஊழியர்கள் இப்பயிற்சி வகுப்புகளை நிறைவுசெய்துள்ள நிலையில், மேற்கு வங்காளத்தின் கொல்கத்தா பிராந்திய தள ஊழியர்களுள் 46 பேருக்கு B.Min வகுப்புகள் 2019 நவம்பர் அன்று துவக்கம் கண்டுள்ளது, ஜெபியுங்கள். தளத்திருச்சபையினால் கிளைத் திருச்சபைகள் மலர்ந்து விரியட்டும்; தரிசன எல்கையின் 6600 கிராமங்களும் சுவிசேஷ தீபங்கள் காணட்டும். – அசானந்த் லிமா

அன்பின் பகிர்வுகள்

கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பான சகோதர, சகோதரிகளுக்கு,

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் கிறிஸ்மஸ், புதுவருட ஸ்தோத்திரம்!

2020 எனும் புதிய ஆண்டுக்குள் அடியெடுத்துவைக்கும்முன் கடந்துவந்த வருடங்களை முழங்காலில் ஸ்தோத்திரத்தோடு பின்நோக்கிப் பார்க்கின்றேன். பகலிலே மேக ஸ்தம்பம் விலகவுமில்லை; இரவிலே அக்கினி ஸ்தம்பம் நீங்கவும் இல்லை; நல்மேய்ப்பரின் முகம்நோக்கி, நம்பிக்கையுடனே நின்ற நாளெல்லாம் நன்மையும் கிருபையும் தொடரவே தொடர்ந்தது! 116ம் சங்கீதம் 12,13ல் தாவீது ராஜா கூறுவதுபோல, "கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்காகவும், அவருக்கு என்னத்தைச் செலுத்துவேன். இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு, கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுவேன்" என்று என் ஆத்துமாவும் முழு உள்ளமும் அறிக்கைசெய்கின்றது.

1980ம் வருடம் மே மாதம் முதலாம் நாள் பரிசுத்த ஆவியானவரின் திருவுளம்பற்றுதலால் எமில் அண்ணன் மூலமாக உதயமான விஷ்வவாணி நற்செய்திப் பணி இயக்கம், 1987 ஜுலை 15 அன்று, டெல்லியில் 'விஷ்வவாணி' என்ற பெயரில், சங்கமாக அரசாங்கத்தில் பதிவுசெய்யப்பட்டது. அவ்விதம் பதிவுசெய்த அந்நாளில் இப்பணியில் முழுநேர ஊழியர்கள் 42 பேர்!

வானொலி ஊழியம்! வானொலி ஊழியம் துவங்குவதற்குப் பல்வேறு மக்கள் இனங்களைப் பற்றிய ஆய்வு – அதன் அடிப்படையில் அதிதேவைமிக்க மக்கள் இன மொழிகளில் வானொலிச் செய்திகள் – பின்தொடர் பணிகள் – நேரடியாக வசனங்களைக் கேட்க வருந்தியழைக்கும் ஜனம் மத்தியில் பணித்தளங்கள் – அதனை தொடர்ந்து பணித்தளப் பணிகளே பிரதான பணிகளாக மாற ஊழியம் உயரம்கண்டது!

அனுபவம்மிக்க எமில் அண்ணனின் தீவிர ஈடுபாடு – இந்திய விசுவாசிகளின் ஜெபம், ஈகை யாவும் விரைவான ஊழிய வளர்ச்சிக்கு வித்திட்டது! விஷ்வவாணி சேமிப்புப்பெட்டிகள் மூலமாக பெற்ற அன்பின் ஈகையினால், ஊழியர் பெருக, ஆத்தும அறுவடை திரளானது; ஊழியர்கள் பிரதிஷ்டை என்ற அணுகுமுறை 'கிராமத் தத்தெடுப்பாக' மாறியது! "அறியப்படாத கிராமங்கள் – அந்தந்த மாநில ஊழியர்கள் – இந்திய விசுவாசிகளின் ஈகை" என்று ஆதிநாளில் வரைந்த அஸ்திபாரக் கோட்பாடுகளைவிட்டு சற்றும் விலகாமல் இன்றும் முன்நோக்கிச் செல்லுகின்றது!

"தேவனுடைய தயவுள்ள கரம் எஸ்றாவுடன் இருந்ததினால் அவனது காரியங்கள் சிறப்பாக நடந்தேறியது" (எஸ்றா 7:9); அதுபோலவே, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையின் கரம் விஷ்வவாணி பணிகளோடும் இருந்தது! கண்ணீர், வேதனை, சோர்பு, இழப்பு, ஏமாற்றம் இவைகளின் ஊடாகவும் ஊக்கமுள்ள ஜெபம், உற்சாக உள்ளத்துடன் ஊழியத்தில் முன்செல்ல கர்த்தர் கிருபைசெய்தார். மாநில முகாம், தேசீய முகாம், சிறப்புக்கூட்டங்களில் விசுவாசிகளை ஒன்றுதிரட்டி, சுவிசேஷப் பணியின் அவசியத்தை அவர்களுக்குப் பகிர்ந்துகொடுத்து, விசுவாசிகளின் ஒருமித்த ஈடுபாட்டினால் ஊழியங்கள் வளரவேண்டுமென்பதே எமில் அண்ணனின் வாஞ்சை! இன்று, இந்திய தேசத்தில் ஓர் முன்மாதிரியான ஊழியமாக, தேவ ஆவியானவர்தாமே பணியை நடத்துகிறார்! ஆம், 2019ம் ஆண்டுக்காக ஆத்துமா கர்த்தரைத் துதிக்கிறது!

2020ஐ நம்பிக்கையோடு முன்நோக்கிப் பார்க்கிறோம், இலக்கை நோக்கித் தொடருகிறோம்! இலக்கு இல்லாத வாழ்க்கை காற்றினால் அடித்துச் செல்லப்படும் மேகம் போன்றது; எங்கே செல்கிறோம் என்பது அதற்கே தெரியாது!

வேதத்தில் இலக்கை நோக்கி செயல்பட்டு, ஜெயங்கொண்ட அநேகரை காண முடியும். அதன் பின்னணியில் தேவகரம் வல்லமையாக செயல்பட்டதையும் அறிகிறோம். ஜலப்பிரளயத்தினின்று ஜனங்களைக் காக்கும் பேழை கட்டும் இலக்கு நோவாவுக்கு! பஞ்சக் காலத்தில் இஸ்ரவேலரைப் பாதுகாப்பது யோசேப்புக்கு! எகிப்தின் அடிமைத்தனத்தினின்று மீட்டு, பாலும் தேனும் ஓடுகிற கானானுக்கு இஸ்ரவேலரை வழிநடத்த மோசேக்கு இலக்கு! தன் சொந்த யூத ஜனங்களைப் பாதுகாக்க எஸ்தருக்கு இலக்கு! எருசலேமின் அலங்கத்தைக் கட்டும்படி நெகேமியாவுக்கு இலக்கு! புறஜாதி யாருக்குச் சுவிசேஷம் அறிவிக்க பரி. பவுலுக்கு இலக்கு; "கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்" என்றார் (பிலிப். 3:14). பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு இந்த உலகத்தில் வந்தார். "ஒரு இலட்சம் இந்தியக் கிராமங்களுக்குச் சுவிசேஷம்; 20 ஆயிரம் முழுநேர ஊழியர்கள்" என்பதே இவ்வூழியத்திற்குத் தேவனளித்த மாபெரும் இலக்கு!

2020ன் இறுதிக்குள், வட இந்தியாவின் மேற்குப் பகுதியிலுள்ள நான்கு மாநிலங்களின் பணி வளர்ச்சிக்கென்று – ஊழியர் பயிற்சிக்கென்று பஞ்சாப் மாநிலம் – பதான்கோட் எனுமிடத்தில் பெரியதொரு பயிற்சி நிலையம் அமையவேண்டும்; சரியானதோர் இடத்தில் 2 ஏக்கர் நிலம் வேண்டும், ஜெபியுங்கள். கர்நாடக மாநிலம் – செல்லக்கரேயில் பயிற்சி நிலையம் கட்டப்பட மனுவேல் ஐயா அவர்களது குடும்பத்தின் சார்பில் நிலம் வாங்க தேவன் கிருபைபாராட்டிவருகிறார். தேவ ஒத்தாசைக்காக ஜெபியுங்கள். ஆந்திர மாநிலம், அரக்குப் பள்ளத்தாக்கில் மக்கள் இன ஊழியர்களுக் கென்று வேதாகமக் கல்லூரி கட்ட நிலம் வாங்கப்பட்டு, கட்டட அனுமதிக்காகக் காத்திருக்கிறோம்; 2020ன் இறுதிக்குள் வகுப்புகள் துவங்கப்பட ஜெபியுங்கள்.

ஊழியங்களைப் பொறுத்தவரை, கண்ணீரின் பள்ளத்தாக்குகளை உருவ நடக்கும் நேரங்களைக் கண்டாலும், அதை நீரூற்றுகளாகவே மாற்றி, 'ஜெயகீதம் பாடும் நாள் சமீபமே' என்பதை மாத்திரம் சிந்தையில் பதித்து, முழங்கால்களை முடக்கி, தரிசனத்தில் முன்நடக்கிறோம்!

அன்பார்ந்தவர்களே, பணிப்பங்காளர்களாகிய நீங்கள் இவ்வூழியத்தில் 2020ல் நிறைவேற்றுவதற்கு ஓர் இலக்கு உண்டு! மாதந்தோறும் குறைந்தது 5 சேமிப்புப் பெட்டிகளை விசுவாசிகளுக்கு வழங்கி, அன்பின் ஈகைதனை பணிக்குச் சேகரிப்பது முதன்மையான இலக்கு; ஊழிய கிராமங்களைப் பொறுப்பேற்கும் 5 குடும்பங்களை வருடந்தோறும் பணியில் இணைப்பதும் பிரதானமான இலக்கு! 2020ன் ஊழியத் திட்டங்கள் பூரணமாக செயல்வடிவம்பெற உங்கள் பங்குகளை தயவாய் ஏற்றிடுங்கள்.

மேலும், 2020ல் நமது வட இந்திய, தென் இந்திய பயிற்சி நிலையங்கள் கட்டுவதற்கு சேமிப்புப் பெட்டியாளர்கள் அனைவரும் சிறப்பு ஈகையாக – ஒரே முறை மட்டும் ரூ. 600/–ம், கிராமங்களைத் தத்தெடுத்துத் தாங்குவோர் ரூ. 3000/–ம் கூடுதலாக புதிய ஆண்டில் கொடுத்துத் தாங்குங்கள்; இவ்விரு பயிற்சி நிலையங்களும் இயேசுவின் நாமத்தை பிரஸ்தாபிக்கும் கலங்கரை விளக்குகளாய் எழும்பும்!

எல்லா நல்விருப்பங்களையும் நிறைவேற்றும் தேவன், உங்கள் இருதயத்தின் நல்வாஞ்சைகள், தனிப்பட்ட தேவைகளைத் தீர்த்து, குடும்பங்களை ஆசீர்வதிப்பாராக!

"கர்த்தர் நித்தமும் உன்னை நடத்தி, மகா வறட்சியான காலங்களில்
உன் ஆத்துமாவைத் திருப்தியாக்கி, உன் எலும்புகளை நிணமுள்ளதாக்குவார்;
நீ நீர்ப்பாய்ச்சலான தோட்டத்தைப் போலவும், வற்றாத நீரூற்றைப்போலவும் இருப்பாய்". ஏசாயா 58:11

சென்னை
3.12.2019

உங்களுக்காக ஜெபிக்கும்
P. செல்வராஜ்,
Chairman, Vishwa Vani Network

முதன் முறையாக

கிறிஸ்மஸ் ஆராதனை அநுசரிக்கும் 124 ஆராதனைக் குழுக்கள்

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து எங்கள் இதயங்களில் பிறந்தார் என்ற நிச்சயம் பெற்று, புதிய விசுவாசத்தை அறிக்கை செய்து, குறைந்தது 10 பேர் குழுவாய் இணைந்து வாரந்தோறும் கூடி தேவனைத் தொழுதுகொள்வதை 'ஆராதனைக் குழு' அல்லது தளத்திருச்சபை என்கிறோம். ஜம்மு காஷ்மீர் துவக்கம் கர்நாடகா வரையிலான பணி மாநிலங்களில் 2019 ஆகஸ்ட் வரையிலான மாதங்களில் 124 ஆராதனைக் குழுக்கள் ஆவியானவரின் அநுக்கிரகத்தினால் உதயமானது; மனோற்சாகத்துடன் - முதல் தலைமுறை விசுவாசிகளுடன் முதன் முறையாக கிறிஸ்மஸ் ஆராதனைக்கும் ஆயத்தமாகுகின்றது. எங்கும் பிதாவைத் தொழுதுகொள்ளும் காலம் கனிந்திருப்பதைக் கால் பதிக்கும் கிராமங்களில் உணருகிறோம். 25.12.19 அன்று கிறிஸ்மஸ் ஆராதனைக்குச் செல்வதற்கு முன், இந்த அட்டவணையில் காணும் ஊழியர் - ஆராதனை ஸ்தலப் பெயர்களை வாசித்து உன்னத தேவனை உயர்த்துங்கள், மகிமைப்படுத்துங்கள்.

என்	கிராமம்	ஊழியர்
ஜம்மு காஷ்மீர்		
1,2	ராம்பன், சந்தர்கோட்	சஞ்சய் பகத்
இமாச்சலப் பிரதேசம்		
3	கங்கத்	அஜய்குமார்
4	சிலாலா	வித்தி சந்தி
5	சத்வான்	ரோகித் ஹான்ஸ்
6,7	லக்ரு, நஹலி	ஜோகிந்த்ரா பால்
8	குனியா	பிரகாஷ் சந்த்
9	ஜகார்	பிங்கு ராம்
10	பைசா	குருதேவ்
11	பாப்பூ	பிரகாஷ் சந்த்
12,13	காபல், சௌந்தரி	குடியா சுனில்
14	துங்யானி	வித்தி சந்த்
15	பிரடா	தீனா நாத்
16	காங்டோலி	பிங்குராம்
17	திகிரி	பிரகாஷ் சந்த்
18	துனாஹத்தி	பிரகாஷ் சந்த்
19	பதி தா கலா	தர்மேந்திரசிங்
பஞ்சாப்		
20	பிந்தேயா	சாமுவேல் மசீ
21	தல்வாண்டி விர்க்	ராபின்
22	பூஸ் மான்டி	ஜஸ்விந்தர்
23	தல்வாண்டி மாண்	ஜோகிந்தர் மசீ
24	கேரி தேவி நகர்	வினேத் சிங்
உத்தராகாண்ட்		
25	பிக்ரபோயாக்	சவிந்த் சிங் ரானா
26	அய்ஜானியா	சூரஜ் சிங்
27	சுங்காரி-2	அமீத் சிங் ரானா
28	பிசாவுதா	அசோக் குமார்
29	பூரா / சிகால்பட்டி	அஜீத் சிங் ரானா
30	சாய்துவாகேரா	புஸ்பேந்தர் சிங்
31	சிசானா	சஞ்சீத் சிங்
32	கூஸ்ரா	ராஜ்புத் சிங் ரானா
33	பலுயாபார்	கபூர் சிங்
ஒடிசா		
34	பத்பீல்	பூபானந்தா பிங்குவா
35	பந்த்பாடா	கிதிஷ் சந்திர தாஸ்
36	கபர் காய்	பூபன் ஹெம்ராம்
37	குந்தியாதுலா	தேபன் கர்ஜி
38	போத்புத்கா	பர்ஜூ முர்மு
39	சரங்காட்	தீனபந்து ஹெம்ராம்
40	உத்பில்கா	பிரகாஷ் பலியார்
41	தென்லுலிபோசி	பிர்தா சோரன்
42	பதாபாடா	அந்திரியா புயான்
மகாராஷ்டிரா		
43	உடாபூர்	விஜய் மேஷ்ராம்
44	வதடா	சுதிர் சிங்காடே
45	சதல்வாடா	ராஜ்குமார் மதவி
46	சபோலி	சகாதேவ் சோந்தகே
கர்நாடகா		
47	தன்னூர்வாடி	ரமேஷ் எஸ்.

எண்	கிராமம்	ஊழியர்
48	கோசிகரே	பரஞ்ஜோதி
சத்தீஸ்கடு		
49	தேவ்டா	ராம்கோபால் சோகன்
50	கடோலா	சுபல் கத்கர்
51	நாக்புரா	வீரேந்திர பர்த்வாஸ்
52	மதுபன்கலா	உமேந்திரகுமார் ஜ.
ஜார்க்கண்டு		
53	கெனலோயா	பிரட்ரிக் பெங்ரா
54	பாந்த்ரா	சுக்ரா லோரா
55	பத்துவாடோலி	விமல் பிரிஜியா
குஜராத்		
56	ரூபஜி பாடா	ரமேஷ் சந்திரா என்.
57	வீர்பூர்	யோகன் பாய் வசாவா
58	பதேகாடி	அஜய்பாய் முனியா
ராஜஸ்தான்		
59	வகேரி	ரூபன் முனியா
60	ரசோதி	ராகேஷ் புரியா
பீஹார்		
61	கடேசர்	தீன நாத் குமார்
62	ஜெய் நகர்	ராஜ்குமார் ராம்
63	கௌரியா	பான்ஸ் நாராயண்
64	நாயகடோலா	பீரஜுகுமார்
65	பெல்ச்சி	ராகேஷ் குமார்
66	டோக்ரா	அமித் குமார்
67	ஜமால்பூர்	ஜீதேந்திரகுமார்
68	சர்கார்டா	மந்தோஷ் குமார்
உத்திரப்பிரதேசம்		
69	ரானிபாரி	தர்மேந்திரக் குமார்
70	பகுட்டி	திலிப் குமார்
71	நகலா	ரஜ்பால்சிங்
72	குரீபூர்	கமலேஷ் குமார்
73,74	மேமூத்பூர், டேஹ்ரா	சுனில் குமார்
75	நகலியா	சுனில்குமார்
76	அடாசேனி	மோஜிஸ் மசீ
77	ஜெய்ராம்பூர்	கமலேஷ் குமார்
78	பல்ராவ்	சஞ்சீத் குமார்
79	சம்சேர்பூர்	பீரேந்திரக் குமார்
80	ராம்பூர் மதனா	மின்டு குமார்
81	சந்தா	சஞ்சய் குமார்
82	கமல்பூர்	சஞ்சீத் குமார்
83	ராய்ஹார்	தினேஷ் ஸ்ரீ வஸ்தவா
84	டோரா மாவ்	வித்யாதர் திவாரி
85,86	மத்னாபூர், வீருபுரம்	தரம்வீர்
87	மடஃபா	நந்தபிரசாத்
மத்தியப்பிரதேசம்		
88	ஜஷால்பூர்	ராம் கிருஷ்ணா கலாம்
89	சோன்கார்	தேவந்திரக் குமார் டி.
90	பிப்பர்கூட்டா	பிரகலாத் சிங்
91	நேவ்சா	ரமேஷ் குமார் மராவி
92	கோரக்பூர் காலா	சாம்சன் மசீ
93	விந்தியா	சியாம் சுந்தர் கோல்

எண்	கிராமம்	ஊழியர்
94	நாவ்காவ்	ராஜ்குமார் பட்
95	தான்ஹறா	மகேந்திர பிரதாப் சிங்
மணிப்பூர்		
96	உகோங்சாங் ம. லே.	சோங்நேசுங் கோம்
அசாம்		
97	கவத்வனாகுரி	சஞ்சய் பசுமத்தாரி
மேற்கு வங்காளம்		
98	மால்தங்கா	ஜேகப் துடு
99	ஜெயந்திகா கியோடாலைன்	சுசில் டெட்
100	கவ்ராமோனி	துனா மார்டி
திரிபுரா		
101	ஜெதீந்தர பாரா	கனமோகன் திரிபுரா
102	ஜதீந்தர நியூ காலனி	கனமோகன் திரிபுரா
103	பினோதா காமி	ரத்தன்குமார் தெபர்மா
104	ஜூமிலா காமி	சுவஜாய் தெபர்மா
105	சரோட் சந்திர பாரா	நியூடன் ரியாங்
106	ஹேம்சோக்லபாரா	மன்மோகன் ரியாங்
107	யாக்பாரா	மனேராய் ரியாங்
108	சாவ்கோய்கூ	மனேராய் ரியாங்
109	திங்கராய் பாரா	நியூடன் ரியாங்
110	தனுராம் பாரா	ரூபன் ஜாய் ரியாங்
111	தர்மணிபாரா	ரூபன் ஜாய் ரியாங்
ஆந்திரப்பிரதேசம்		
112	அவுலன்னா	அசோக் ஓய்.
113	கன்னய்யாகுடா	ஜெயராம் எம்.
114	பொல்லவலசா	கங்காராவ் டி.பி.
115	மன்டா	வி. எல்லராவ்
116	பாத்தபெத்தகுடா	கே. வெங்கடராவ்
117	மத்யகாலா	எஸ். பீமா ராஜூ
118	எரமனுகுடா	ஜே. மோகனராவ்
119	பெத்தகேதரி	ஜே. மோகனராவ்
120	வெர்லாமாமிடி	வருண் கொர்ரா
121	தாமரவீதி	கே. பரசுராம்
122	கொய்யிகுன்டா	கே. வருண்
123	பர்சிங்கிமெட்டா	எஸ்.சண்டிபாபு
தெலுங்கானா		
124	உப்புநுந்தலா பி.கே.	திருப்பதிராவ் கே.

இந்தியாவின்

29 மாநிலங்களில்

பணிபுரியும்

3957

முழுநேர ஊழியர்களின்

சார்பில்

உங்களுக்கு எங்கள் அன்பின்

கிறிஸ்மஸ், புத்தாண்டு வாழ்த்துக்கள்!

கோதுமை மணிகளின் வரிசையில்

மனைவியுடன் ஊழியர் ராஜேஷ்

இருபத்து எட்டு வயது நிரம்பிய இளம் ஊழியர் ராஜேஷ் குமார் இயேசுவின் இராஜ்ய விருத்திப் பணியைப் பீஹார் மாநிலத்தின் ஆரா மண்டலத்தில் செய்து வந்தவர்; துல்ஹன்கஞ்ச் பணித்தளத்தை மையங்கொண்டு போஜ்புரி, இந்தி மொழியினர் மத்தியில் சுவிசேஷப் பணியை அர்ப்பணத்தோடும் ஆர்வத்தோடும் நிறைவேற்றி வந்த இவ்விளைஞன், அக்டோபர் 17 அன்று காலையில் திடீரென நெஞ்சு வலியினால் துடித்தார்; மருத்துவமனை சேரும் முன் தன் கர்த்தாவின் மகிமைக்குள் பிரவேசித்துவிட்டார்.

ஊழியத் தேவை நிறைந்த கிராமங்களைத் தள ஆய்வுசெய்து தேர்ந்தெடுப்பதில் தேறினவர்; திருமுழுக்கு ஆராதனைகளைத் தேவ மகிமைக்கென்று கிராமம் கிராமமாக நிறைவேற்றுவதில் கிருபை பெற்றவர்; நூறத்தனையான குடும்பங்களை குறுகிய காலங்களில் கர்த்தருடைய ஐக்கியத்தில் இணைத்தவர்; நான்கு தளச் சபைகளும், ஏழு வேதபாட வகுப்புகளும் உருவாகப் பரலோகத்தால் பயன்படுத்தப்பட்டார்; 'என்றும் கர்த்தாவுடன்' இணைந்திருக்கும் சிலாக்கியத்தை இளமையிலேயே பெற்றும்விட்டார்!

கவலைகளும், கண்ணீரின் பள்ளத்தாக்குகளும் அழுத்தினாலும், கணவரின் ஊழிய தரிசனத்தையே உள்ளத்தில் பதித்து, ஊழியத் தடங்களில் முன் நடக்கும் திருமதி. மம்தாகுமாரி அவர்களுக்கும், 'அப்பா இயேசப்பாவுடன் இருக்கிறார்கள்' என்று கண்களைத் துடைக்கும் சிறுமகன் சஹில் குமார் (வயது 5) இரட்டைப் பிள்ளைகள் மரியம், மார்த்தா (வயது 4) ஆகியோருக்கும் கர்த்தர் பலத்த அரணாயிருப்பார்; ஆறுதல் அளிப்பார்! துல்ஹன்கஞ்ச் தள விசுவாசிகளின் ஆறுதலுக்காகவும் ஜெபித்துக்கொள்ளுங்கள்.

இராமநாதபுரம் மாவட்டப் பணி வளர்ச்சிக் குழுவின் வருடாந்திரக் கூடுகை

விஷ்வவாணி பணித்தளங்களில் — குறிப்பாக வட கிழக்கு மாகாணங்களின் குக்கிராமங்களில் ஆத்துமாக்களும் ஆலயங்களும் சுவிசேஷப் பிரகடனத்தால் பெருகுவதற்கு — தரிசனத் தடங்களில் ஊழியங்கள் விரைந்து வளருவதற்கு உகந்த தீர்மானங்கள் அக்டோபர் 24 அன்று இராமநாதபுரம் வட்டாரப் பிரதிநிதிகளின் கூடுகையில் பிறந்தது. சுவார்ட்ஸ் மெட்ரிக் மேனிலைப் பள்ளியில் இடம்பெற்ற இக்கூடுகையில் பணியின் பிரதிநிதிகள் 16 பேர் பங்கேற்றனர். பரமன்கேணி கடலோரத்தில் 2003ம் வருடம் ஜனவரி 12 அன்று எமில் அண்ணன் துவக்கித் தந்த மாவட்டப் பணி அணுகுமுறையை ஸ்தோத்திரத்துடன் நினைவுகூர்ந்தனர். மாவட்டப் பணி வளர்ச்சிக் குழுத் தலைவராக திரு. D.அன்பழகன் (DSF) அண்ணன் அவர்களையும், உப தலைவராக திரு. P. ஸ்டீபன்சன் அவர்களையும் பணி வளர்ச்சிக் குழுவின் உறுப்பினர்களாக திரு. C. நெல்சன், திரு. R. ஜோசுவா, திரு. R. வில்சன் சமாதானக் குமார் ஆகியோரையும் கொண்ட குழுவாக இராமநாதபுரம் மாவட்டப் பணி வளர்ச்சிக் குழு ஜெபத்துடனும் தீர்மானத்துடனும் ஏக மனதாய் ஏற்படுத்தப்பட்டது. ஜெபக் குழுவினர், ஸ்தானாபதிகள் மற்றும் விரிவாக்கப்பணியாளர் சகோ. முத்துக்குமார், ஒருங்கிணைப்பாளர் சகோ. G. தேவராஜ், தென், மத்திப தமிழக ஒருங்கிணைப்பாளர் Rev.A. வில்சன் ஜோசப் ஆகியோருடன் தங்கள் மாவட்டத்தின் தரிசனப் பங்குகளைச் செவ்வனே நிறைவேற்றுவதற்குத் தேவ பெலன், தேவ வல்லமை, தேவ நடத்துதல் இக்குழுவினர் அனைவரையும் ஆட்கொள்ள வாஞ்சித்து ஜெபிக்கிறோம், ஜெபியுங்கள்.

நன்றியறிதலுள்ளவர்களாயிருங்கள்

- அருள்திரு. இம்மானுவேல் ஞானராஜ், இயக்குநர்-ஜெப ஒருங்கிணைப்பு

தேவ சமாதானம் உங்கள் இருதயங்களில் ஆளக்கடவது, இதற்கென்றே நீங்கள் ஒரே சரீரமாக அழைக்கப்பட்டீர்கள், நன்றியறிதலுள்ளவர்களாயுமிருங்கள். (கொலோ. 3:15).

நன்றி மறப்பது நன்றன்று. செய்ந்நன்றி கொன்றவர்க்கு உய்வில்லை என்றும் நாம் கற்றிருக்கிறோம். என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி; என் முழு உள்ளமே, அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்திரி; அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே (சங்.103:1-2). நன்றி மறவாதிருக்க வேண்டும் என அறிவுறுத்தும் உலகத்தின் நடைமுறைப் பகுதிகளை எட்டிப்பார்க்கும்போது பல வேளைகளில் திகைப்பு இடம்பெறுகிறது. அப்போஸ்தலர் 24ம் அதிகாரத்தில் தொடக்கம்பெறும் ஓர் விசாரணை, அதில் பேலிக்ஸ் எனும் அதிபதிக்கு முன் பவுல் அப்போஸ்தலன் விசாரிக்கப்படுதல் இடம்பெறுகிறது. பவுல் மீது குற்றம் சுமத்த பிரதான ஆசாரியனுடன் வரும் தெர்த்துல்லு எனும் நியாய சாதுரியவான் அல்லது வழக்கறிஞன் தன் குற்றச்சாட்டைத் துவங்குகிறான் (அப். 24:2,3). தெர்த்துல்லு வாதத்தைத் தொடங்குவதற்காக உபயோகிக்கும் முகஸ்துதி வார்த்தைகள் 3ம் வசனத்தில் இடம்பெறுகிறது. அதில் குறிப்பிடுவது என்ன? ‘‘உம்முடைய பராமரிப்பினாலே இந்தத் தேசத்தாருக்குச் சிறந்த நன்மைகள் நடக்கிறதையும் நாங்கள் எப்பொழுதும் எங்கும் மிகுந்த நன்றியறிதலுடனே அங்கிகாரம்பண்ணுகிறோம்’’ என்கிறான். ரோம ஆட்சியைச் சற்றும் விரும்பாத - அங்கிகரிக்காத யூத மதத் தலைவர்கள் சார்பாகக் கூறும் வார்த்தைகள் இவை. இந்த நன்றியறிதல் என்ற வார்த்தை மாய்மாலமாக, ஒரு முகஸ்துதிக்குப் பயன்படுத்தப்பட்டதே அல்லாமல் மனப்பூர்வமான அங்கிகாரம் அல்ல. இங்கு நன்றி என்பது கபடமான ஒன்றாக, தங்களுக்குச் சாதகமாக வழக்கைத் திருப்புவதற்குப் பயன்படுத்தப்படும் தந்திரமே அன்றி வேறொன்றுமில்லை. அப்படியானால் உள்ளத்திலிருந்து வரும் நன்றியறிதல் எப்படி இருக்கும், இருக்கவேண்டும்.

நன்றியறிதலுள்ளவர்களின் செயல் எப்படி இருக்கும்?

1) தேவனுக்கு நன்றிக்கடன்: தாவீது தன் எல்லாச் சத்துருக்களுக்கும் நீங்கலாக்கி தேவன் அவனை இளைப்பாறப்பண்ணினபோது தன் தேவன் மேல் கொண்ட நன்றியறிதலை வெளிப்படுத்துகிறார் (2சாமு.7). முதலாவது தன் ராஜ்யபாரத்தைத் திடப்படுத்தி பின் தனக்கு அரமனையைக் கட்டிவிட்டான். ஆனால் அவன் உள்ளம் அவனை வருத்துகின்றது. அது என்ன? 2ம் வசனம் இப்படிக் கூறுகிறது: ராஜா தீர்க்கதரிசியாகிய நாத்தானை நோக்கி: பாரும், கேதுரு மரங்களால் செய்யப்பட்ட வீட்டிலே நான் வசிக்கிறேன். அப்படி நான் சௌகரியமாக வசிக்கும்போது தேவனுடைய பெட்டி திரைகளின் நடுவிலே வாசமாயிருக்கிறதே என்கிறான். அதாவது என்னை ராஜாவாக்கின என் தேவனுடைய பெட்டி இதைவிட நல்ல வீட்டில் அல்லவா இருக்கவேண்டும். ஒன்றுமில்லாத என்னை இவ்வளவாய் உயர்த்திய தேவன், ஆடுகளின் பின்னே நடந்துகொண்டிருந்த என்னைத் தாம் தெரிந்துகொண்ட இஸ்ரவேலுக்கு ராஜாவாக்கிய தேவனுக்கு நன்றிக்கடன் எவ்வாறு செலுத்துவேன். அவர் கூடாரத்திலிருக்கும்போது நான் எவ்வாறு இந்த அரமனையில் தங்குவது? அவருக்கு ஒரு ஆலயமல்ல, அரமனை கட்டவேண்டும். இதுதான் தாவீது தன்னை ராஜாவாக்கிய தேவாதி தேவனுக்குச் செலுத்த விரும்பிய நன்றிக்கடன்.

தொடர்ந்து தேவனுடைய ஊழியக்காரன் ‘உம் மனதில் உள்ளபடியே செய்யும்’ என்று சொன்ன போதிலும், ‘‘ஆலயத்தை நீ எனக்குக் கட்டுவாயோ?’’ நான் ‘‘உனக்கு வீடு கட்டுவேன்’’ என்று கர்த்தரின் திட்டத்தையும் வெளிப்படுத்துகிறார் (2 சாமுவேல் 7). தான் ஆலயம் கட்டுவதைத் தேவன் அனுமதிக்க வில்லை என்று கண்ட தாவீது, தன் நன்றிக்கடனை எப்படி நிறைவேற்றினான் என்று 132ம் சங்கீதத்தின் முதல் 6 வசனங்களிலும், அதுபோல 1 நாளா. 29ம் அதிகாரத்திலும் விவரமாகக் காண்கிறோம். தேவனுடைய ஆலயமாகிய அரமனையை கட்ட, செய்யவேண்டிய சகல பணிகளையும் தாவீது செய்வதைப் பார்க்கிறோம். 1 நாளா. 29:3ல் ‘‘என்னால் இயன்ற மட்டும்’’ என்று தொடங்குகிறாரே, அது அவர் தேவாதி தேவனுக்குச் செலுத்திய நன்றிக்கடன். நன்றியறிந்த உள்ளத்தோடு எடுக்கப்பட்ட பிரயாசம். தன் வாழ்நாள் முழுவதும் தாவீது எடுத்தப் பிரயாசம்.

2) நட்புக்கு நன்றிக் கடன்: தாவீதின் நன்றியறிதலை மற்றுமொரு விதத்தில் பார்க்கிறோம். சவுலும் யோனத்தானும் மரித்துப்போன பின்பு தாவீது ராஜாவாக அபிஷேகம்பண்ணப்பட்டான். கோலியாத்தைக் கொன்று சவுலுக்குப் பெரிய வெற்றியைப் பெற்றுக்கொடுத்த தன்னை, விடாமல் துரத்தின சவுலுக்கு ஓடி ஓடி ஒளிந்தானேயன்றி சவுல் ராஜாவைப் பகைக்கவில்லை. தான் ராஜாவான பின்பு சவுலின் சந்ததியை அழிக்க விரும்பவில்லை. மாறாக, தான் தன் ஆன்ம சிநேகிதனாகிய யோனத்தானின் நிமித்தம் தன்னிடம் தயை பெற யாராவது உள்ளார்களா என்று தேடுகிறான். யோனத்தானிடம் தான் பெற்ற நட்பு, தான் செய்த உடன்படிக்கை, அவற்றை மறந்துபோகவில்லை. நட்பிற்கு நன்றிக்கடன் செலுத்த விரும்புகிறான். 2 சாமு. 9 முழுவதும் அந்த நன்றியறிதலின் வெளிப்பாடுதான். இரு கால்களும் முடமான மேவிபோசேத் எனும் யோனத்தானின் மகன் தாவீதின் முன் கொண்டுவரப்பட்ட போது மேவிபோசேத் உள்ளத்தில் எப்படி இருந்திருக்கும். ஆனால் தாவீது 7ம் வசனத்தில் ‘‘பயப்படாதே, உன் தகப்பனாகிய யோனத்தான் நிமித்தம் நான் நிச்சயமாய் உனக்குத் தயை செய்து, உன் தகப்பனாகிய சவுலின் நிலங்களையெல்லாம் உனக்குத் திரும்பக் கொடுப்பேன்; நீ என் பந்தியிலே நித்தம் அப்பம் புசிப்பாய்’’ என்று கூறி அவனை ஆச்சரியத்தில் ஆழ்த்துவது தாவீதின் நன்றிக்கடனே!

நன்றியறிதல் உள்ளவர்களாயிருப்போமா?

நாம் நம் தேவாதி தேவனுக்கு நன்றியறிதலுள்ளவர்களாக இருப்போமா? தம் சொந்தக் குமாரன் இயேசு கிறிஸ்துவை நமக்காக பலியாக ஒப்புக்கொடுத்தாரே, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நம் பாவங்களையெல்லாம் தன் மேல் ஏற்று, கோரக் குருசை நமக்காகச் சுமந்து கொல்கொதா மலை ஏறினாரே, தமது இரத்தத்தைச் சிந்தி, பலியாகத் தமது ஜீவனைத் தந்தாரே, அவருக்கு நன்றியுள்ளவர்களாக இருப்போமா? தேவாதி தேவன் வானாதி வானம் விட்டு சிறு பாலகனாக மாட்டுக்குடிலில் வந்து பிறக்க தன்னைத் தாழ்த்தினாரே, அவரை நேசிக்க அவரின் விலைமதியாத அன்புக்கு நன்றிசெலுத்த நாம் முன்வருவோமா? மந்தை ஆயர் வந்து பணிந்தனர், ஞானிகள் வந்து வணங்கினர், நாமும் அவரை ஆராதிக்க மனம் திறப்போமா? நன்றி பலிகளால் நம் நாவு நிறையட்டும். நம் வாழ்க்கையை அவருக்கு அர்ப்பணிப்போம். நம் வாழ்வின் சிறப்பானவற்றை அவருக்குக் காணிக்கையாக்குவோம். நம் வாழ்வையே அவருக்கு நன்றிபலியாக்குவோம். தாவீதை ஆசீர்வதித்தது போலவே அவர் நம்மை ஆசீர்வதிப்பார். ■

பணித்தளச் செய்திகள்

ஸ்தோத்திரமும் வேண்டுதலும்

**தங்கள் ஆபத்திலே கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகிறார்கள்;
அவர்கள் இக்கட்டுகளுக்கு அவர்களை நீங்கலாக்கி இரட்சிக்கிறார்.**
சங்கீதம் 107:19

---

01 ஜம்மு காஷ்மீர். முதல் கிறிஸ்மஸ் அனுசரிக்கும் ஆராதனைக் குழுக்கள்: 2

கிறிஸ்து இயேசுவில் தங்கள் புதிய விசுவாசத்தை 18 பேர் அறிக்கை செய்தனர். நியூ பிளாட் எனுமிடத்தில் அறிவிக்கப்பட்ட வேத வசனங்கள் 10 புதிய ஆத்துமாக்களை மறுபிறப்பின் அனுபவம் காணச் செய்தது. ஊழியர் ராகேஷ் மசீ – சத்யா தம்பதியினருக்குத் தேவன் குழந்தை பாக்கியம் அருளினார்.

கத்துவா, ரஜோரி ஆகிய மாவட்டங்களில் தளங்கள் திறக்கப் பிரயாசம் எடுக்கிறோம். ஜஸ்வான் கிராமத்தில் பணிக்கெதிராய் வருவோர் மனந்திரும்பவேண்டும்... லாலி, கன்டலா ஆகிய தளங்களில் இடம்பெறவுள்ள விசுவாச அறிக்கை ஆராதனைகளுக்காக ஜெபியுங்கள்.

02 இமாச்சலப்பிரதேசம் . . . . முதல் கிறிஸ்மஸ் அனுசரிக்கும் ஆராதனைக் குழுக்கள்: 17

பரோட், ஜகோதி ஆகிய தளங்களில் 12 குடும்பங்கள் விசுவாசிகள் ஐக்கியத்தில் இணைந்துள்ளன. கட்வல் திருச்சபையாரின் ஊழிய வாஞ்சைக்காகக் கர்த்தருக்கு ஸ்தோத்திரம். ஊழியர்கள் மனோஜ், வீரேந்தர் கோகார் குடும்பங்களுக்குத் தேவன் குழந்தை பாக்கியம் தந்தார், துதியுங்கள்.

விசுவாச அறிக்கை ஆராதனைக்கு 30 பேர் ஆயத்தமாகுகின்றனர். பங்ரான், ராஜாகாபாக் ஆகிய தளங்களின் விசுவாசிகளுக்கு ஆலயம் கட்ட நிலம் வாங்கப்படவேண்டும். ஊழியர் மனீஷ் என்பாரின் சிறுமகள் சரும வியாதியினால் அவதியுறுகிறாள், ஜெபியுங்கள்.

03 பஞ்சாப். . . . . முதல் கிறிஸ்மஸ் அனுசரிக்கும் ஆராதனைக் குழுக்கள்: 7

5 வருடங்களாகப் பிசாசின் வல்லடியில் சிக்கியிருந்த சுனிதாவுக்கு இயேசுவின் நாமத்தில் விடுதலை கிடைத்தது. பணித்தள ஆய்வுப் பணியின் மூலம் 25 புதிய கிராமங்கள் ஊழியத்திற்கெனத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. தளங்களில் தங்கள் புதிய விசுவாசத்தை அறிக்கைசெய்த 85 பேருக்காகத் தேவனுக்கு ஸ்தோத்திரம்.

30 கிராமங்களில் நடத்தப்பட்ட இரவுக்கூட்டங்களின் பின்தொடர் பணிகளுக்காக... தாவிடா, அரானா, புல்லோவல் ஆகிய தளங்களில் இடம்பெற்ற பஞ்சாபி மேளாக்களில் பங்கெடுத்தோர் ஆத்மாதாயப் பணியில் ஈடுபட... தேடுவோர் கூட்டங்களில் தேவனை அறிந்த 95 புதிய விசுவாசிகளும் தேவ வசனங்களில் பெலப்பட... ஜெபியுங்கள்.

04 உத்தராகாண்ட் .... முதல் கிறிஸ்மஸ் அநுசரிக்கும் ஆராதனைக் குழுக்கள்: 6

பிரீத் நகர் ஆராதனைக் குழுவிலிருந்து விஷ்ணு தாபா, பல்ராம் ஆகியோர் தன்னார்வ சுவிசேஷகர்களாக எழும்பியுள்ளனர். ரூர்கீ தாலுகாவின் லபோலி பகுதியில் தள ஊழியம் துவங்கப்பட்டுள்ளது. 18 பேர் கிறிஸ்துவில் தங்கள் புதிய விசுவாசத்தை அறிக்கை செய்தனர். தேடுவோர் முகாம்களில் கலந்துகொண்டவர்களுள் 27 பேர் இயேசுவைத் தங்கள் இரட்சகராக அங்கிகரித்தனர், துதியுங்கள்.

தாரு ஜனக் கூட்டத்தாரைச் சுவிசேஷத்தால் சந்திக்க 20 இளைஞர்கள் தேவை... துக்ரி வீச்வா, நகுலியா, பன்பாசா ஆகிய இடங்களில் ஆரம்பிக்கப்பட்ட சுவிசேஷ வேலைக்காக... சிந்திமஜ்ரா, மகுவாத் போன்ற கிராமங்களில் கர்த்தரின் சபை மலர வேண்டிக்கொள்ளுங்கள்.

05 ஹரியானா ....

தேடுவோர் கூட்டங்களில் வசனங்கள் கேட்ட 300 பேரில் 75 பேர் மனந்திரும்பியுள்ளனர்; வேதபாட வகுப்பில் ஆர்வத்துடன் கலந்துகொள்கின்றனர். திகோட் எனுமிடத்தில் புதியதோர் வேதபாட வகுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பரிதாபாத் ஜில்லாவில் மேலும் 15 கிராமங்கள் ஊழியத்திற்கெனத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

பபியால், காத்காட், சோந்த் ஆகிய இடங்களில் தொடரும் இரவுக்கூட்டங்கள் ஆத்துமாக்களைத் தர... அசாவார்பூரில் ஆராதனைக் குழு துவங்கும் பிரயாசங்களுக்காக... கேன்சர் வியாதியின் பிடியிலுள்ள ரிட்டு, சிநேகா ஆகியோரின் நற்சுகத்திற்காக ஜெபியுங்கள்.

06 டெல்லி ....

கஞ்சன்கஞ்சில் துவங்கிய வேதபாட வகுப்பில் புதிய நபர்களின் வருகை அதிகரித்துள்ளது. மதன்பூர் காதர் ஆராதனைக் குழுவில் 3 புதிய குடும்பங்கள் இணைந்துள்ளன. கொடிய சாலை விபத்திலிருந்து உயிர்பிழைத்த ராம் குமார் கர்த்தருக்கு மகிமை செலுத்துகிறார்.

டெல்லி மற்றும் சுற்றுப்புறக் கிராமங்களின் ஜனங்களுக்கு சுகாதாரமான சுவாசக் காற்று கிடைக்க... பிரியங்கா கேம்ப் எனுமிடத்தில் விசுவாசத்தை விட்டுப் பின்வாங்கிப்போன 2 குடும்பங்களும் ஆராதனையில் மீண்டும் பங்கெடுக்க... விசுவாசிகளின் குடும்ப முகாமில் பங்கேற்ற 27 குடும்பங்களும் புதிய குடும்பங்களைக் கர்த்தருக்குள் நடத்த... ஜெபியுங்கள்.

07 ராஜஸ்தான் .... முதல் கிறிஸ்மஸ் அநுசரிக்கும் ஆராதனைக் குழுக்கள்: 2

காதியா கிராமத்தில் 20 நாட்கள் சுயநினைவின்றி கிடந்த சாந்திலால் எனும் சிறுவன் இயேசுவின் நாமத்தில் எழுந்து நடக்கிறான். ஜேக்தா, நென்பாரா ஆகிய தள ஆலயங்களின் கட்டுமானப் பணி தேவ நடத்துதலால் வளர்ந்தேறுகிறது. 10 பேர் தங்கள் புதிய விசுவாசத்தை இயேசுவில் அறிக்கைசெய்தனர்; மேலும் பதியாவில் புதியதோர் ஆராதனைக் குழு உதயமானது, ஸ்தோத்திரம்.

வலோலியாவில் விதைக்கப்பட்ட வேத வசனங்கள் புதிய ஆத்துமாக்களைத்

தர... சாராதீத், சர்போடாபாடா, வகேரி, பலியாகேடா ஆகிய நான்கு தளங்களில் ஆயத்தமாயுள்ள ஆலய நிலங்கள் வாங்கப்பட வேண்டும். துங்கர்பூர், ராஜ்சமந்த், சிரோகி ஆகிய மாவட்டங்களில் தொடரும் தள ஆய்வுப் பணிகளுக்காக... ஜெபியுங்கள்.

08 உத்திரப்பிரதேசம் – லக்னோ ...... முதல் கிறிஸ்மஸ் அனுசரிக்கும் ஆராதனைக் குழுக்கள்: 13

பயிற்சியை நிறைவுசெய்து பணித்தளம் திறந்துள்ள 8 புதிய ஊழியர்களுக்காக ஸ்தோத்திரம். கர்த்தரால் சுகம்பெற்ற சிவ்தேவியின் சாட்சி, குரியானி கிராமத்தில் நற்செய்தி பரம்ப ஏதுவாயிற்று. சமர்சேபூர் பகுதி ஊழியங்களுக்கு கங்காதேவி வீட்டாரைத் தேவன் சமாதானப் பாத்திரமாய்த் தந்தார், துதியுங்கள்.

டெங்கு காய்ச்சலினால் பெலவீனமடைந்துள்ள ஊழியர் ஈஷாக் மசீ கர்த்தரால் பூரண பெலனடைய... ரேஹ்ரா, பல்ராவ் ஆகிய ஆராதனைக் குழுக்களுக்கென்று தெரிவுசெய்யப்பட்டுள்ள ஆலய நிலங்கள் வாங்கப்பட வேண்டும்... பக்கவாதத்தின் பிடியிலுள்ள அஜய் என்பாருக்கு இயேசுவின் தொடுதல் தேவை, ஜெபியுங்கள்.

09 உத்திரப்பிரதேசம் – போஜ்புரி ...... முதல் கிறிஸ்மஸ் அனுசரிக்கும் ஆராதனைக் குழுக்கள்: 6

35 கிராமங்களில் தேடுவோர் கூடுகைகள் நடத்தப்பட்டன; 56 குடும்பங்கள் விசுவாசிகள் ஐக்கியத்தில் புதிதாய் இணைந்துள்ளன. தையற்கல்விக் கூடங்களில் இணைந்து பயிற்சி பெறும் 250 சகோதரிகளுக்காகக் கர்த்தருக்கு ஸ்தோத்திரம். புதிதாக தள ஊழியங்கள் துவங்குவதற்கு 110 கிராமங்கள் ஆய்வுப்பணியின் மூலம் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

ஆராய் பணித்தள ஊழியர் பச்சேலாலின் மகன் ஆர்யசந்த் மனநோயின் தாக்கத்திலிருந்து விடுபட... போஜ்புரி பிராந்தியத்தில் விசுவாச அறிக்கை ஆராதனைக்காக ஆயத்தப்படும் 672 பேருக்காக... முதல் தலைமுறை விசுவாசிகளால் நிரம்பிய 4 ஆராதனைக் குழுக்களுக்கு ஆலய நிலங்கள் வாங்கப்படவேண்டும், ஜெபியுங்கள்.

10 பீஹார் .... முதல் கிறிஸ்மஸ் அனுசரிக்கும் ஆராதனைக் குழுக்கள்: 8

சுவிசேஷ ஊழியத்திற்கு 15 இளைஞர்கள் தங்களைச் சமூலமாய் அர்ப்பணித்துள்ளனர். பெலாச்சி, தோகரா, நாயக்கடோலா, ஜமால்பூர் ஆகிய இடங்களில் கர்த்தரின் சபை உதயமானது. பாரா கரோனி தளத்தில் ஆலயம் கட்டுவதற்கான நிலத்தைக் கர்த்தர் கிருபையாய்த் தந்தார், ஸ்தோத்திரம்!

ஊழியர் ராம்பலியின் மனைவி பபிதா தேவி குடல்வால் நோயினால் அவதியுறுகிறாள். இயேசுவில் தங்கள் புதிய விசுவாசத்தை அறிக்கைசெய்துள்ள 91 பேரின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக... விசுவாச அறிக்கை ஆராதனைக்கான ஆயத்த வகுப்புகளில் பங்கேற்கும் 521 பேருக்காக... ஜெபியுங்கள்.

11 ஜார்க்கண்டு..................... முதல் கிறிஸ்மஸ் அனுசரிக்கும் ஆராதனைக் குழுக்கள்: 3

கோர்தா மொழியினர் நடுவில் சுவிசேஷ ஊழியம் துவங்கப்பட்டுள்ளது. 17 பேர் இயேசுவில் தங்கள் புதிய விசுவாசத்தை அறிக்கையிட்டனர். கஸ்மார் கிராமத்தில் ஆலயக் கட்டுமானத்திற்கான நிலம் ஆயத்தமானது. சாயிச்சானி கிராமத்தில் தேவ பணிக்குத் தடையாயிருந்த சந்தோஷ் ராம் சுவிசேஷத்தினால் புதுசிருஷ்டியானார்.

சித்தாகோனி வேதபாட வகுப்பில் புதிதாய் இணைந்துள்ள சஞ்சய் ஒராவன்

குடும்பம் தேவ அன்பில் வளர... ஊழியர் லாலு ஒராவனை இழந்து வாடும் மனைவி பிரிஸ்கில்லா பார்லாவுக்கும் இரண்டு வயது மகள் ஏலினுக்கும் தேவாறுதல் தேவை. காம்தா கிராமத்தில் சுவிசேஷத்திற்குச் சாட்சிபகரும் புதிய விசுவாசி பிர்சா குரியா மூலம் அநேகர் நீதிக்குட்பட ஜெபியுங்கள்.

12 மேற்கு வங்காளம் (டார்ஜிலிங்) ..... முதல் கிறிஸ்மஸ் அநுசரிக்கும் ஆராதனைக் குழுக்கள்: 2

காசநோயிலிருந்த கருணா திகாவுக்குக் கர்த்தர் பூரண சுகமளித்தார். புவன்குரி, கமலாபாரி ஆகிய தளங்களில் விசுவாசிகளின் எண்ணிக்கை பெருகக் காண்கிறோம், ஸ்தோத்திரம். இரு வருடங்களாகப் பக்கவாதப் படுக்கையிலிருந்த சுனில் ஒராவன் இயேசுவின் நாமத்தில் எழுந்து நடக்கிறார்.

தைப்பூ பகுதியில் காணப்படும் அந்தகாரத்தின் கிரியைகளைக் கர்த்தர் அதமாக்க... இமாலய ஜெப முகாமின் பின்தொடர்பணிகளுக்காக... மதுப்பழக்கத்திற்கு அடிமையாயுள்ள சும்தா கிராம ஜனங்களின் இரட்சிப்புக்காக... பூர்பிசத்பீல் கிராமத்தினர் சுவிசேஷத்தில் மனம்பதிக்க... ஜெபியுங்கள்.

13 மேற்கு வங்காளம் (எத்தில்பாரி)...

தள ஆய்வுப்பணியின் வாயிலாக 610 கிராமங்கள் ஊழியத்திற்கெனப் புதிதாய்த் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளது. காசநோயினின்று ஜெபத்தினால் சுகமடைந்த ஜமுனா ஒராவன், கோவார்லைன் கிராமத்தில் ஜீவ தேவனுக்குச் சாட்சிபகருகிறாள். சிப்திபாரியைச் சேர்ந்த தேவ் சின்கா வீட்டாரனைவரும் கர்த்தரையே சேவிக்க முன்வந்துள்ளனர், துதியுங்கள்.

எதிர்ப்புகள் நடுவில் ஊழியர் விஜய் துரிக்கு தேவ ஒத்தாசை கிடைக்க... சல்தூரா விசுவாசிகள் ஐக்கியத்தில் புதிதாய் இணைந்துள்ள விஷ்ணு, ஜஸ்பினா ஆகியோரின் குடும்பங்கள் வசனங்களில் பெலப்பட... முருகுட்டு கிராமத்தில் வேதபாட வகுப்பு துவங்க உழைக்கும் ஊழியர் நிரன் ஹஸ்தாவுக்காக ஜெபியுங்கள்.

14 மேற்கு வங்காளம் (கோல்கத்தா) .... முதல் கிறிஸ்மஸ் அநுசரிக்கும் ஆராதனைக் குழு: 1

காகுர்தா தளத்தில் விஷப்பாம்புக் கடியிலிருந்து உயிர்பிழைத்த கிருஷ்ணா குந்து, இயேசுவின் வல்லமைக்குச் சாட்சிபகருகின்றார். ரேரிபூர் ஆராதனைக் குழுவில் தன்னார்வ சுவிசேஷகனாக உதவிபுரியும் இளைஞன் பினோத் சோரன் முழுநேரப் பணிக்குத் தன்னை அர்ப்பணித்துள்ளான். பிசாசின் பிடியிலிருந்து காரிதாஸ், பிஷ்ணு முர்மு ஆகியோர் இயேசுவால் மீட்கப்பட்டனர்.

சந்திப்பூர் கிராமத்தார் கிறிஸ்துவின் அன்பை அறிய... லீலி சோரனின் மனநோய் இயேசுவின் நாமத்தில் குணமாக... ஹத்பாரா, கொபாதட் ஆகிய தளங்களில் விசுவாசிகளின் எண்ணிக்கை உயர... ஜெபியுங்கள்.

15 அசாம் .... முதல் கிறிஸ்மஸ் அநுசரிக்கும் ஆராதனைக் குழு: 1

போடோ, ரபா ஜனங்கள் மத்தியில் நான்கு வேதபாட வகுப்புகள் துவங்கப்பட்டுள்ளது. தேடுவோர் கூட்டங்கள் வாயிலாக 128 கிராமங்களுக்குத் தேவ அன்பு பகிர்ந்தளிக்கப்பட்டது. லவோரிபாராவில் 9 பேர் இயேசுவின் நாமத்தில் பாவமன்னிப்பு பெற்றனர்.

மீசிங் இனத்தவர் மத்தியில் 31 பேர் விசுவாச அறிக்கைக்கு ஆயத்தமாகுகின்றனர். விசுவாசத்தினிமித்தம் இன்னல்களை எதிர்கொள்ளும் ராம்குமார் சேத்திரிக்காக... ஜல்பைகுரியில் காணப்படும் ஊழியத் தடைகளைத் தேவன் அகற்ற... ஜெபியுங்கள்.

16 சிக்கீம்

பலுதாங் பிராந்தியத்தின் சுபா இனத்தவர் சுவிசேஷம் கேட்பதில் மனோவாஞ்சை கொண்டுள்ளனர். 4 பேர் தங்கள் புதிய விசுவாசத்தை இயேசுவில் அறிக்கைசெய்தனர். தடோங் கிராமத்தின் சோனம் தமாங் வீட்டாரனைவரும் கிறிஸ்துவுக்குச் சாட்சி பகருவதில் முன்நிற்கின்றனர், துதியுங்கள்.

ஹதிதுங்கா கிராம விசுவாசிகளின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக... திகாராம் சர்மா என்பாரின் அவிசுவாசம் இயேசுவால் நீங்குவதாக... ஜோரிதாங் சிறப்புக்கூட்டத்தில் பங்கேற்ற விசுவாசிகள், ஆத்மாதாயப் பணியில் ஈடுபட... ஜெபியுங்கள்.

17 மணிப்பூர் .... முதல் கிறிஸ்மஸ் அநுசரிக்கும் ஆராதனைக் குழு:1

கெய்புல் கிராம விசுவாசிகள் ஐக்கியத்தில் 3 குடும்பங்கள் புதிதாய் இணைந்துள்ளன. சிங்குனோவ், தேக்சாம், லேமராம் ஆகிய இடங்களில் நடத்தப்பட்ட சிறுவர் ஊழியங்கள், 372 சிறார்களுக்குப் பலனளித்தது. தேடுவோர் கூட்டங்களில் பங்கெடுத்த 2526 பேரில் 358 பேர் சுவிசேஷத்தை மீண்டும் கேட்கும் விருப்பம் தெரிவித்துள்ளனர்.

லம்ஜாவ் கிராம விசுவாசிகள் கூடி ஆராதிப்பதற்கு ஏற்றதோர் இடம் தேவை. சலம் தள ஊழியர் T. ரமேஷ் சிங் என்பாருக்கு எதிர்ப்புகள் நடுவில் தேவ ஒத்தாசை பெருகவேண்டும். விசுவாச அறிக்கைக்கு ஆயத்தமாகும் 245 பேருக்கும் ஆராதனைகளை ஒழுங்குசெய்யும் ஊழியர் குழுவுக்காக ஜெபியுங்கள்.

18 திரிபுரா .... முதல் கிறிஸ்மஸ் அநுசரிக்கும் ஆராதனைக் குழுக்கள்: 11

அசோக் காலனியில் கர்த்தரின் சபை உருவானது. 29 பேர் கிறிஸ்துவில் தங்கள் புதிய விசுவாசத்தை அறிக்கையிட்டனர். அகங்மாபாரா, விஷ்வவாணி காமி, தனுராம் பாரா, கோன்டாரி ஆகிய இடங்களில் சிறப்பு மேளாக்கள் நடத்தப்பட்டது; புதிய தொடர்புகளைப் பணியில் தந்தது, துதியுங்கள்.

ஹருங்பாரா, கவச்சம்காமி ஆகிய தளங்களில் விசுவாசிகளின் எண்ணிக்கை உயர... உலம்சரபாராவில் திறக்கப்பட்ட தேவாலயம் மூலம் அண்டைக் கிராமங்கள் வேத வெளிச்சம் பெற... 11 பணித்தளங்களில் இடம்பெறும் ஆலயக் கட்டுமானத்தின் நிறைவுபணிகளுக்காக... ஜெபியுங்கள்.

19 ஒடிசா – பரலாகமன்டி பிராந்தியம் .... முதல் கிறிஸ்மஸ் அநுசரிக்கும் ஆராதனைக் குழுக்கள்: 2

சுவிசேஷத் திரைப்படங்கள் வாயிலாக 4 கிராமங்களில் ஊழியத் தொடர்புகள் விரிவடைந்துள்ளன. கஜுரிசாஹி கிராம ஜனங்களுக்குச் சுகாதாரக் குடிநீர் வசதி கிட்டியது. 14 பேர் தங்கள் புதிய விசுவாசத்தை இயேசுவில் அறிக்கைசெய்தனர்.

28 புதிய கிராமங்களில் தேடுவோர் முகாம்களை ஒழுங்குசெய்யும் ஊழியர்களுக்குத் தேவன் தமது நடத்துதலைத் தர... சுவிசேஷத் திரைப்படங்கள் வாயிலாக 12 கிராமங்களுக்குச் செல்லும் பணித் திட்டங்களுக்காக... சபலாடா, லும்தாசிங், பிஜிபூர் ஆகிய தளங்களில் நடைபெறும் ஆலயக் கட்டுமானப் பணிகளுக்காக ஜெபியுங்கள்.

20 ஒடிசா – ஹோ, சந்தாலி .... முதல் கிறிஸ்மஸ் அநுசரிக்கும் ஆராதனைக் குழுக்கள்: 5

பாடுலிடிகி, அஷன்பானி ஆகிய தளங்களின் விசுவாசிகளுக்குத் தேவன் தந்த ஊழிய வாஞ்சைக்காக ஸ்தோத்திரம்! போத்புத்காவில் நடத்தப்பட்ட இரவுக்

கூட்டத்தைத் தொடர்ந்து புதிய தொடர்புகளைப் பணியில் பெற்றுள்ளோம். சுபோத் ஹெம்ரோம் எனும் புதிய விசுவாசியின் நிமித்தம் பருதீ கிராமத்தில் சுவிசேஷம் பரம்பி பலன் தருகின்றது, ஸ்தோத்திரம்!

படாசாகி ஆராதனைக் குழுவில் புதிதாய்ப் பங்கேற்கும் பூதுராம் முன்டா குடும்பத்தினர் விசுவாச ஜீவியத்தில் வளர... தாயாரை இழந்துள்ள ஊழியர் திரிலோச்சன் தங்கா வீட்டாரின் ஆறுதலுக்காக... கனமழை, வெள்ளத்தால் உடைமைகளை இழந்துள்ள பசந்தபாரா கிராம ஜனங்களுக்காக ஜெபியுங்கள்.

21 ஒடிசா – கந்தமால் மாவட்டம் . . . .

சுட்ரா தளச் சபையில் மூன்று புதிய குடும்பங்கள் இணைந்துள்ளன. 10 வருடங்களுக்குப் பின் குழந்தை பாக்கியம் பெற்ற ராம்நாத் குடும்பத்தினர் இயேசுவை மகிமைப்படுத்துகின்றனர். மூன்று கிராமங்களில் வேதபாட வகுப்புகள் துவங்கப்பட்டுள்ளன.

கன்டார்முண்டாவில் கர்த்தரின் சபை வர்த்திக்க... லகேரிகியாவில் பணிக்கெதிராய் வருவோரைக் கர்த்தர் சந்திக்க... படாகுடாவில் தளம் திறந்துள்ள ஊழியர் பிஷிசானாவின் ஊழிய எல்லைகளைத் தேவன் விரிவாக்க... ஜெபியுங்கள்.

22 ஒடிசா – சம்பல்புரி . . . . முதல் கிறிஸ்மஸ் அநுசரிக்கும் ஆராதனைக் குழுக்கள்: 2

முழுநேரப் பணியாளர்களாக 10 வாலிபர்கள் தங்களைத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்தனர். சம்பல்புரி ஜனங்கள் வாழும் கர்லாமுகன் கிராமத்தில் கர்த்தரின் ஆலயம் பிரதிஷ்டையானது. ஆறு பேர் தங்கள் புதிய விசுவாசத்தை இயேசுவில் அறிக்கைசெய்தனர், துதியுங்கள்.

விசுவாசிகள் ஐக்கியத்தில் புதிதாகப் பங்கேற்கும் 12 பேரும் வேத வசனங்களில் ஸ்திரப்பட... தள ஒருங்கிணைப்பு மையமாகிய பாலாங்கீர் அலுவலகத்திற்குக் கணினி அவசியமாகுகிறது. மேற்கு ஒடிசா பணித்தளங்களில் விசுவாசிகள் பெருகும் 4 தளங்களில் ஆலய நிலங்கள் வாங்கப்பட வேண்டியுள்ளது, ஜெபியுங்கள்.

23 சத்தீஸ்கடு . . . . முதல் கிறிஸ்மஸ் அநுசரிக்கும் ஆராதனைக் குழுக்கள்: 4

கதோலா கிராமத்தில் கர்த்தரின் சபை உருவானது. முல்முலா ஆராதனைக் குழுவின் விசுவாசிகள் மூலம் அமையப்பெற்ற ‘போர்வெல்’ ஆழ்குழாய் கிணறு முல்முலா கிராமத்திற்கு அர்ப்பணமானது. 28 பேர் கிறிஸ்துவில் தங்கள் புதிய விசுவாசத்தை அறிக்கைசெய்தனர், துதியுங்கள்.

போதை வஸ்துக்களுக்கு அடிமையாயுள்ள புதேலால் மனந்திரும்ப... வாய்ப்புற்றுநோயினால் அவதியுறும் பிசாம்பர் கர்த்தரால் குணமாக... சத்தீஸ்கடி விசுவாசிகளின் மேளாவில் பங்கெடுத்தோர் ஆத்மாதாயகர்களாய் மாற... ஜெபியுங்கள்.

24 மத்தியப்பிரதேசம் . . . . முதல் கிறிஸ்மஸ் அநுசரிக்கும் ஆராதனைக் குழுக்கள்: 8

இரத்தசோகையினால் 4 மாதங்கள் பெலவீனப்பட்டிருந்த சுஷ்மா இயேசுவின் நாமத்தில் புதுபெலனடைந்தார். காலைச் சுற்றிய விஷப்பாம்பிடமிருந்து ராஜா எனும் விசுவாசியின் உயிரைத் தேவன் பாதுகாத்தார். ராம்பரோஸ் என்பாரின் சாட்சியின் மூலம் வீட்டாரனைவரும் இரட்சிப்பின் மார்க்கம் அறிந்தனர்.

மந்தமான செவிகளையுடைய ரவி சிங் என்பாருக்குக் கேட்கும் திறனைத் தேவன் தந்தருள... 22 வருடங்களாகியும் தீராத மனநோயுடைய

அனார்கலிக்குக் கர்த்தர் இரங்க... மூன்று முறை குழந்தைகள் பிறந்தும், ஒன்றும் பிழைக்காததால் பெரும் சோகத்திலுள்ள ரேனு பாய்தி குடும்பத்திற்காக... ஜெபியுங்கள்.

25 குஜராத் – தாகோத். . . . . முதல் கிறிஸ்மஸ் அநுசரிக்கும் ஆராதனைக் குழுக்கள்: 2

45 பேர் தங்கள் புதிய விசுவாசத்தை இயேசுவில் அறிக்கை செய்தனர். 900 பேருக்கு நற்செய்தி நேரடியாக அறிவிக்கப்பட்டது; 58 பேர் மனந்திரும்புதலின் அவசியம் அறிந்து, விசுவாசிகள் ஐக்கியத்தில் இணைந்தனர். பத்தீயா, நானிசரோலி ஆகிய தளங்களில் விசுவாசிகளின் எண்ணிக்கை உயரக் காண்கிறோம், ஸ்தோத்திரம்.

152 இடங்களில் நடத்தப்பட்ட தேடுவோர் முகாம்கள் புதிய ஆத்துமாக்களைத் தர... ஹத்மாத் எனுமிடத்தில் ஆலயத்திற்கான நிலத்தை அன்பளிப்பாக்கிய வாலாபாய் கராசியா குடும்பத்தைக் கர்த்தர் ஆசீர்வதிக்க... 30 கிராமங்கள் தள ஆய்வுப் பணி மூலம் ஊழியத்திற்கென தெரிவுசெய்யப்படவுள்ளது, ஜெபியுங்கள்.

26 குஜராத் – நர்மதா . . . .

போர்சனா தளத்தில் நடத்தப்பட்ட தெபோராள் கூடுகை 116 பேருக்குப் பலனளித்தது. சுவிசேஷ ஊழியத்தில் முழுநேரமாய் இணைந்துகொள்ள 12 இளைஞர்கள் தங்களைச் சமர்ப்பித்துள்ளனர். மோசரா, நானா சுகாம்பா ஆகிய இடங்களில் வேதபாட வகுப்புகள் துவங்கப்பட்டுள்ளன. ஜுமாவாதி, கந்தியாம்பா ஆகிய தளங்களில் ஆலயக் கட்டுமானப் பணி ஆரம்பம் கண்டது.

சோரபாடாவில் புதிய விசுவாசிகளின் எண்ணிக்கை உயர... சிமிபட்டல், வத்காம் ஆகிய இடங்களில் தொடரும் சுவிசேஷக் கூட்டங்களில் புதிய நபர்கள் பங்கேற்க... சரும வியாதியினால் சோர்ந்துபோயுள்ள சகோதரி மோக்ராபேன் இயேசுவின் நாமத்தில் சர்வாங்க சுகமடைய... ஜெபியுங்கள்.

27 மகாராஷ்டிரா . . . . முதல் கிறிஸ்மஸ் அநுசரிக்கும் ஆராதனைக் குழுக்கள்: 4

11 பேர் தங்கள் புதிய விசுவாசத்தை அறிக்கைசெய்தனர். லகட்வால் பயிற்சி நிலையத்திற்குக் கணினி வழங்கிய விசுவாச உள்ளங்களுக்காக ஸ்தோத்திரம். அந்தலகாவில் தொடரும் உபவாச ஜெபங்கள் ஊழியத்திற்கு மிகுந்த பலன் அளிக்கிறது.

அம்பர்நாத், அகமத்நகர் ஆகிய பணி மையங்களுக்கு ஊழியர்கள் அவசியமாகுகிறார்கள். தியல்காவ் ஆலயக் கட்டுமானப் பணி குறித்த நாட்களுக்குள் நிறைவடைய... விசுவாச அறிக்கைக்கு ஆயத்தப்படும் 28 பேருக்காக... 2020ல் 10 தளங்களில் ஆலயங்கள் கட்டும் வாஞ்சையைக் கர்த்தர் நிறைவேற்ற... ஜெபியுங்கள்.

28 தெலுங்கானா . . . . முதல் கிறிஸ்மஸ் அநுசரிக்கும் ஆராதனைக் குழு: 1

சுவிசேஷ ஊழியங்களைத் துவங்க 50 புதிய கிராமங்கள் கண்டெடுக்கப் பட்டன. அவற்றுள் 19 கிராமங்களில் ஊழியர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். புதிய ஊழியர்களின் பிரவேசத்தினால் 23 வேதபாடக் குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஜன்காவ், குஜ்ஜா ஆகிய ஆலயக் கட்டுமானப் பணிகள் தேவ திட்டப்படி நடந்தேறுகிறது, துதியுங்கள்.

நாகர் கர்னூல் ஜில்லாவின் உள்ளான கிராமங்களுக்கு ஊழியர்கள் தேவையாகுகிறார்கள். ஏழு பணித்தளங்களில் இடம்பெறும் ஆலயக் கட்டுமானப்பணிகளை மார்ச் 2020க்குள் நிறைவுசெய்யவேண்டும். தரிசனத் திட்டப்படி இன்னும் 4658 கிராமங்களில் சுவிசேஷ தீபமேற்றவேண்டும், ஜெபியுங்கள்.

29 ஆந்திரப் பிரதேசம் – விஜயநகரம்

ஜீரிகிவலசா தளத்தில் விஷப் பாம்புக் கடியிலிருந்து உயிர்பிழைத்த ராமு இயேசுவை மகிமைப்படுத்துகிறார். புதிய விசுவாசிகள் பெருகும் சுங்கி தளத்தில் ஆலய நிலம் ஆயத்தமாயுள்ளது. தள ஆய்வுப் பணியின் மூலம் 18 கிராமங்கள் ஊழியத்திற்கெனத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது, துதியுங்கள்.

சப்பாபுசிம்பேட்டா, நிம்மலப்பாடு பகுதிகளுக்கு முழுநேர ஊழியர்கள் தேவையாகுகிறார்கள். நந்தா பிராந்தியப் பணிகள் எதிர்ப்புகளைச் சந்திக்கிறது. விசுவாசிகள் பெருகும் ஜியாம்மவலசா, பத்மாபுரம் ஆகிய தளங்களில் ஆலய நிலங்கள் வாங்கப்படவேண்டும். பாந்திரிவலசா, அமீதி கிராம விசுவாசிகளின் சாட்சிகளால் அண்டைக் கிராமங்கள் சுவிசேஷ மயமாக ஜெபியுங்கள்.

30 ஆந்திரப் பிரதேசம் – மேற்கு கோதாவரி மாவட்டம்.

பந்தம்பாவி தள விசுவாசிகள் ஐக்கியத்தில் அல்லுரையா வீட்டாரைத் தேவன் புதிதாய் இணைத்துள்ளார். உசிரிஜோனல்லு கிராம ஊழியங்களுக்கு ஆதரவாக ராம் பாபு டோரா குடும்பத்தைக் கர்த்தர் ஆயத்தம் செய்தார். டெங்கு காய்ச்சலால் மரண விளிம்பிலிருந்த பாபி ராஜு, இயேசுவின் நாமத்தில் மறுவாழ்வு பெற்றார்; லோதிபாலம் கிராமத்தில் சுவிசேஷத்திற்குச் சாட்சியாளனாக மாறினார், ஸ்தோத்திரம்!

உடதபள்ளி சபை விசுவாசிகள் சுவிசேஷ வேலையில் ஆர்வங்கொள்ள... அந்தகாரப் பிடியில் இருக்கும் பந்தபள்ளி கிராம ஜனங்களின் இரட்சிப்புக்காக... செருவுகுடம் தள ஆலயக் கட்டுமானத்தின் நிறைவு பணிகளுக்காக... ஜெபியுங்கள்.

31 கர்நாடகா. முதல் கிறிஸ்மஸ் அநுசரிக்கும் ஆராதனைக் குழுக்கள்: 2

ஹள்ளி தளத்தைச் சேர்ந்த லக்ஷ்மன், இனி மது அருந்துவதில்லை எனத் தீர்மானமெடுத்துள்ளார். கிறிஸ்துவில் புதுவாழ்வுபெற்ற 27 பேர் விசுவாச அறிக்கை செய்து, தளச்சபையில் இணைந்துள்ளனர். 164 தேடுவோர் கூட்டங்கள் நடத்தப்பட்டது; 1652 ஆத்துமாக்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டது, ஸ்தோத்திரம்.

உதேகோலம் எனுமிடத்தில் தொடரும் நற்செய்தி முகாம்களில் புதிய ஜனங்கள் பங்கேற்க... விசுவாச அறிக்கைக்கான ஆயத்த வகுப்புகளில் கலந்து கொள்ளும் 160 பேரும் கிறிஸ்துவில் புதுபெலனடைய... மோலகேரா தளத்தில் மனைவியை இழந்துள்ள சஞ்சு குமார் மற்றும் மூன்று பிள்ளைகளின் ஆறுதலுக்காக... ஜெபியுங்கள்.

23 இளைஞர்கள் இணைந்தார்கள்

இராஜஸ்தான் மாநிலத்தின் குக்கிராமங்களைக் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தினால் ஆசீர்வதிப்பதற்கு தரிசனம் பெற்ற 23 இளைஞர்கள் முழுநேரப் பணிக்கான வளாகப் பயிற்சியில் நவம்பர் 5, 2019 அன்று இணைந்துள்ளனர். சேவனியா தளத்தில் இடம்பெறும் மூன்று மாத காலப் பயிற்சி இப்புதிய ஊழியர்களுக்கு மிகுந்த பலன் தரவும், தேவ வல்லமையிலும், வசனத்திலும் தேறினவர்களாய்த் தேவன் தாமே இவர்களை நிறுத்தவும் வேண்டிக்கொள்ளுங்கள். – சிலாஸ் சௌகான், இராஜஸ்தான் மாநில ஒருங்கிணைப்பாளர்.

தேவ வாக்குத்தத்தமும் வாசஸ்தலமும்

பணித்தளங்களைப் பார்க்க இமாச்சலப்பிரதேச மலைகளுக்குப் பயணப்படுகிறோம் என்ற செய்தி எங்கள் செவிகளை எட்டிய நாளிலிருந்தே எங்கள் எட்டு பேரின் உள்ளங்களிலும் மட்டற்ற சந்தோஷம்!

தொலைவைக் கணக்கிடும்பொழுது திருநெல்வேலியிலிருந்து மூவாயிரம் கிலோ மீட்டருக்கு அப்பால் அமைந்திருக்கும் தளங்கள்; ஆனால் எங்கள் தனி ஜெப நேரங்களில் அதிகமாய் நினைவுகூரும் இடங்கள்! 2019 அக்டோபர் 13 அன்று கட்வல் என்ற பணித்தளத்தின் தேவாலயப் பிரதிஷ்டையில் கர்த்தரின் மகிமைக்காக கலந்துகொள்வதே எங்கள் பயணத்தின் நோக்கம்!

பஞ்சாப் மாநிலம் – பதான்கோட் மார்க்கமாகப் பிரயாணமெடுத்தோம்! கிறிஸ்துவில் மறுபடியும் பிறந்தவர்களின் துதி ஆராதனைகளும், அனுபவ சாட்சிகளும் எங்கள் இதயங்களில் நீங்கா இடம்பிடித்தவைகள்!

திருமதி. பெனிட்டா செல்வக்குமார், திருமதி பிரேமா ஜோதி பாண்டியன் ஆகியோரின் ஸ்தோத்திர ஜெபங்களுடன் கட்வல் தள ஆலயம் திறந்து வைக்கப்பட்டது. சுவிசேஷத்தினால் கிடைக்கப்பெற்ற ஆத்தும இரட்சிப்பைக் குறித்து இமாச்சலி, பஹரி இனத்து இளைஞர்கள் மிகுந்த தைரியத்தோடே சாட்சி பகர்ந்தார்கள்!

கட்வல் தள ஊழியராகிய அஜய் குமார் – பந்தோ தேவி குடும்பத்தினரின் ஜெப வேளையில், “ஆலயம் கட்டப்படும்” என்ற வாக்குத்தத்தத்தை 2018ம் ஆண்டில் அருளிய ஆவியானவர், திருமதி. பெனிட்டா அவர்களது வீட்டாரை ‘ஆலயம் கட்டவேண்டும்’ என்றும் ஏவியருளியதைப் பிரதிஷ்டை ஆராதனையின் சாட்சி வேளைகளில் கேட்டபோது, “கர்த்தர் எத்தனை உண்மையுள்ளவர்” என்பதை உணர்ந்து உள்ளம் பொங்க ஸ்தோத்திரித்தோம்! டாக்டர் ஜூலியட் வனிதா ராணி அவர்களது ஜெபமும் திருமதி. பிரேமா ஜோதிபாண்டியன் அவர்களது அருட்செய்தியும் புதிய விசுவாசிகளுக்குப் பலனுள்ளதாயிருந்தது! தேவனுக்குள் எங்கள் இதய தீர்மானங்கள் நிறைவேற தேவன் பயன்படுத்திய திரு. லாசர் ஆனந்தராஜ் அவர்களுக்கும், தளங்களில் உடன் பயணித்த ஊழியர் குழுவுக்கும் இயேசுவின் நாமத்தில் நன்றிகள்! – பயணக் குழுவுடன் டாக்டர் ஜூலியட் வனிதா ராணி.

2019 ஆண்டுக்காக

ஆத்துமா கர்த்தரைத் துதிக்கின்றது

ஜெபம் எனும் ஆதரவுகோல் கொண்டு தளங்களைத் தாங்குவோமென்ற 100 புதிய ஜெபக் குழுக்கள் மற்றும் 70 இடங்களில் நடத்தப்பட்ட படக்காட்சி இரவு ஜெபங்கள் – அதன் வகையில் ஜெபப் பங்காளர்களாக தேவன் சேர்த்த 526 விசுவாசிகளுக்காக ஸ்தோத்திரம். மாதாந்திர உபவாச ஜெப முகாம்கள், ஊழியர் குடும்பங்களின் பிராந்திய முகாம்கள் வாயிலாக தமது வல்லமையை வெளிப்படுத்திய கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

2019ம் ஆண்டின் ஆகஸ்ட் வரையிலான எட்டு மாதங்களில் தளங்கள் கண்ட தேடுவோர் முகாம்கள் 65,076; தேவ வசனங்களை நேரடியாய்க் கேட்ட ஆத்துமாக்கள் 8,46,547. அவருடைய சொல் மகா தீவிரமாய்ச் செல்லுவதற்காக ஸ்தோத்திரம்.

திருமுழுக்கு ஆராதனைகளை அன்றாட நிகழ்வுகளாகத் தளங்களில் நடத்துபவர் பரிசுத்தாவியானவர்; பத்து மாதங்களில் 6810 பேருக்கு அந்த அனுபவத்தை அவரே அருளினார்; மேலும் 10,857 பேரை இந்த அனுபவத்திற்கான ஆறு மாத வசனப் பயிற்சியில் – ஆயத்த வகுப்புகளில் இணைத்திருக்கும் அவருக்கே சதா மகிமை, ஸ்தோத்திரம்!

கர்த்தரின் நாமத்தை ஒருமித்து உயர்த்தும் புதிய ஆராதனைக் குழுக்களை – தளத் திருச்சபைகளை 124 கிராமங்களில் ஸ்தாபித்த நம் கர்த்தர் துதிக்கப்படுவாராக; எங்கும் பிதாவைத் தொழுதுகொள்ளும் வாய்ப்புகளைத் தளங்களில் உருவாக்குபவரே, தமது நல்ல நாமத்துக்கு ஸ்தோத்திரம்!

மக்கள் இனங்கள் மத்தியில் நடத்தப்பட்ட 13 மேளாக்களும் பரலோக தேவனுக்கு மகிமை சேர்த்தது; முதல் தலைமுறை விசுவாசிகளின் சங்கமித்தலால் சுவிசேஷப் பிரகடனங்கள் பெருகும் சந்தர்ப்பமும் கைகூடி வந்தது, ஸ்தோத்திரம்.

விஷ்வவாணியின் 29வது பணி மாநிலமாக நாகலாந்தில் நம் பணியாளர்களின் பாதங்கள் பிரவேசிக்கச் செய்தார். பணித்தளங்களின் எல்லையை மேலும் பத்து மாவட்டங்களில் விரிவடையச் செய்தார்; கோர்ட்டா எனும் ஜார்க்கண்டு மாநிலத்து மொழியினர் மத்தியில் நம் முதல் ஊழியரை அனுப்புவித்தார்; அறுவடையின் எஜமானரே அனைத்தையும் செய்தார், ஸ்தோத்திரம்!

நற்செய்திப் பணிக்கு அநுகூலமாகத் தேவன் தந்தருளிய நான்கு சக்கர வாகனங்கள் நான்கும் இவ்வாண்டில் தேவ கரத்திலிருந்து பெற்ற அநுக்கிரகங்களே! அவைகள் இயங்கும் தடங்களில்

ஆத்தும அறுவடை உயருதல் உண்டு; ஊழியர்களின் துரிதப் பிரயாணங்களில் பிரதிபலன் பெருகுவதும் உண்டு! எல்லா நல்ல ஈவுகளுக்கும் ஊற்றும் காரணருமாகிய கர்த்தாவே, ஸ்தோத்திரம்!

'புதிய ஆத்துமாக்களின் பெருக்கம் புதிய ஆலயங்கள்'. அவைகளின் பிரதிஷ்டை ஆராதனைகளை ஆண்டின் துவக்கம் முதல் இறுதி வரை இடம்பெறச் செய்த தேவன், 93 ஆலயங்களைத் தளங்களில் திறக்கச் செய்தார்; மேலும் 107 தளச் சபைகளுக்கான கட்டடப்பணிகளைத் துவங்கவும் செய்தார்! 'என் சபையைக் கட்டுவேன்' என்றவரே, தம் திரு வருகை வரை திருச்சபைகளைத் தேசத்தில் கட்டுவீர், தம் ஜனத்தைக் கூட்டுவீர், ஸ்தோத்திரம்!

9 பயிற்சி நிலையங்கள் தங்களில் ஊழியப் பயிற்சியை முறைப்படி நிறைவுசெய்த 213 புதிய ஊழியர்களைத் தளங்களுக்கு அனுப்பி வைத்தது; அவர் தம் மக்கள் / மொழி இனங்களைச் சுவிசேஷத்தினால் சுபிட்சமடையச் செய்வதற்கு ஏற்ற ஆயத்தங்களுடன் அணியணியாய் அனுப்பிவைத்தது! 'பவுலையும் பர்னபாவையும் அனுப்பிவைக்கத் திருவுளம் பற்றிய தேவாவியானவர் தாமே, பரந்த பாரதத்தின் குக்கிராமங்களில் தேவ அன்பைப் பிரகடனம் செய்யப் பயன்படுத்தும் பாத்திரங்களுக்காக ஸ்தோத்திரம்!

பணியின் கனியைக் கண்கூடாகவும் காண விரும்புகிறோமென்று உள்ளத்தில் வாஞ்சித்த ஊழியப் பங்காளர்கள் 1873 பேர், 116 பயணக் குழுக்களாக தளம் பார்க்க வருகை தந்தார்கள்; ஜம்மு காஷ்மீர் துவக்கம் கர்நாடகா வரை கண்டு கர்த்தரில் களிகூர்ந்தார்கள், அறுவடையில் ஆனந்தம் கண்டார்கள்! ஒருவராய்ப் பெரிய அதிசயங்களைச் செய்பவருக்குத் தாங்கும் முழங்கால்களால் தளங்களில் துதிகள் பெருகியது, ஸ்தோத்திரம்!

பதினோரு மாநில முகாம்கள் – ஒன்பது பட்டண முகாம்கள் என்று ஜெபப் பங்காளர்கள் ஒன்று திரண்டதன் பலன், பணி வளர்ச்சியில் பிரதிபலித்தது. புதிய பிரதிநிதிகளின் இணைதலால் கிராமத் தத்தெடுப்புகளும், ஊழியர் பிரதிஷ்டை ஆராதனைகளும் ஊழிய விரிவாக்கத்திற்கு வித்திட்டது! விசுவாசத் தீர்மானங்கள் எழுதிய உள்ளங்களுக்காக உன்னத தேவனுக்கு ஸ்தோத்திரம்!

மருத்துவமனைக்குத் தூரமான கிராமங்களுக்கு நேரில் சென்ற மருத்துவ ஊழியர்களினிமித்தம் 11,156 வியாதியஸ்தர்களுக்கு ஏற்றவேளையில் பலன் கிட்டியது. மேற்கு வங்காளம், இராஜஸ்தான் மாநில தளங்களில் எழுத்தறிவில் பின்தங்கிய கிராமங்களில் ஐந்து கல்விக்கூடங்கள் துவங்கவும், பொருளாதாரத்தில் பின்தங்கிய ஸ்திரீகள் வாழ்வாதாரம் பெற தையற்பயிற்சி நிலையம் ஒன்றை மகாராஷ்டிராவிலும் திறந்தருளிய தேவனுக்கு ஸ்தோத்திரம்.

ஊழிய விபரங்கட்கு...

தென் தமிழகம்:
18-B, டேனியல் தாமஸ் தெரு,
பாளையங்கோட்டை-2.
✆9790193578.
நாகர்கோவில்: 9444343180
திருநெல்வேலி: 9442006618.
தூத்துக்குடி: 9677796052.

மத்திய தமிழகம்:
29A, பெத்தானி நகர்,
விளாச்சேரி ரோடு, பசுமலை,
மதுரை - 625 004.
Ph.0452-2380443, 9865352272.
விருதுநகர்: 9659803075.

மேற்கு தமிழகம்:
45, அன்சாரி வீதி, ராம் நகர்,
கோயம்புத்தூர்-641009
✆ 0422-2232504
கோயம்புத்தூர்: 9442006614;
பொள்ளாச்சி: 9789758300.

வட தமிழகம்: திருச்சி:
26A, எட்டுப் பட்டறை காம்பவுண்டு,
திரு.வி.க. நகர், புத்தூர்,
திருச்சி-620017 ✆ 9488804685
தஞ்சாவூர்:
5/1032, மிஷன் மேட்டுத் தெரு,
தஞ்சாவூர் - 613 001. ✆ 9443586692
விழுப்புரம் & பாண்டிச்சேரி:
9443997515

சென்னை:
12, கிழக்கு கிளப் சாலை,
செனாய் நகர், சென்னை-30.
✆ 044-26646675
சென்னை பெருநகர்-1: 9600888375;
சென்னை பெருநகர்-2: 9003609874
சென்னை சுற்றுவட்டாரம்: 9444794577

பிற மாநில அலுவலகங்கள்:
புது டெல்லி: 26365928, 9910762447.
பெங்களூரு: 080-23333509.
மும்பை: 9890223355, 9029872213.

நடப்புச் செய்திகள்

இந்தியச் சிறைக்கூடங்களில் கைதிகளின் எண்ணிக்கை அதிகரித்து விட்டதால் நெரிசல் அதிகமாகி வருகிறது. தேசிய அளவில் இது 115% என்று தேசிய குற்ற ஆவணப் பதிவகம் வெளியிட்டுள்ள 2017க்கான ‘இந்திய சிறைக்கூடத் தரவு’ தெரிவிக்கிறது. உத்திரப்பிரதேசம் (165%), சத்தீஸ்கடு (157.2%), டெல்லி (151.2%) ஆகியவற்றில் நிலைமை மோசம். நம் சிறைகளில் உள்ள மோசமான விஷயம் என்னவென்றால் அங்குள்ளவர்களில் 68% பேர் விசாரனைக் கைதிகள் என்பதாகும். வழக்குகள் முடியாத அல்லது வழக்கு விசாரனையே தொடங்காத சூழலிலேயே தண்டனையை எதிர்கொள்பவர்கள் இந்தியச் சிறைகளில் அதிகம்.

சிறைக் கம்பிகளுக்குள் வாழ்வை நகர்த்துவோருக்காக - அவர்தம் மறுவாழ்வுக்காக - விடுதலையின் நாளுக்காக ஏங்கும் அவர்தம் குடும்பங்களுக்காக ஜெபியுங்கள்.

இந்தியாவில் நிமோனியா பாதிப்பால் ஒரு மணி நேரத்துக்கு 14 குழந்தைகள் உயிரிழப்பதாக ‘சேவ் த சில்ரன்’ அமைப்பு அண்மையில் நடத்திய ஆய்வு தெரிவிக்கிறது. கடந்த 2018ல் இந்தியாவில் 1,27,000 குழந்தைகளும், நைஜீரியாவில் 1,62,000 குழந்தைகளும், பாகிஸ்தானில் 58,000 குழந்தைகளும், காங்கோவில் 40,000 குழந்தைகளும் எத்தியோப்பியாவில் 32,000 குழந்தைகளும் உயிரிழந்துள்ளனர். உலகளவில் ஆண்டுதோறும் 8 இலட்சம் குழந்தைகள் அதாவது நாள்தோறும் 2000 குழந்தைகள் இறக்கின்றனர்.

குழந்தைகளின் உயிரைக் குடிக்கும் நிமோனியாவிலிருந்து நிரந்தர விடுதலையைக் கர்த்தர் தாமே தந்தருளுவாராக!

50 ஊழியர் பிரதிஷ்டை:

தேவ கிருபையினாலேயே நடந்தேறியது

இயேசு நாமம் தவிர இரட்சிக்கப்பட வேறு நாமம் இவ்வுலகில் மனிதருக்கு இல்லை என்ற தேவ சத்தியத்தை உரத்த சத்தமாய்க் கூறியறிவிக்க அழைப்பு பெற்ற, அர்ப்பணித்து முன்வந்த 50 மிஷனெரிகளின் பிரதிஷ்டை ஆராதனையை பூவன்கோடு ஊழிய வட்டாரத்தில் 2019 அக்டோபர் 25-27 தேதிகளில் கண்டு தேவனைத் துதித்த உள்ளங்கள் பாக்கியம் பெற்றவை. ''இதோ, அடியவர் ஆயத்தம்'' என்ற அவர்தம் அர்ப்பணக் குரல்கள் கண்களில் கண்ணீர் பெருக் கெடுக்க வைக்கிறது. செல்லும் கால்கள் கர்த்தரின் கனத்திற்குரியவைகளே!

27.10.2019 அன்று பூவன்கோடு சி.எஸ்.ஐ.சேகர சபை காலை ஆராதனையில் வைத்து மேற்கு வங்க ஊழியர் 12 பேரை அர்ப்பணம் செய்து வைத்த தலைமை ஆயர் அருள்திரு. றிங்கிள் ஜெயக்குமார் மற்றும் உதவிப்போதகர் திரு. எல்.ஆர். ஜெபசிங் ஆகியோருக்கு நன்றியை மனப்பூர்வமாகக் கூறுகின்றோம்.

கண்ணனூர் சி.எஸ்.ஐ. சபையின் பரிசுத்த ஓய்வு நாள் ஆராதனையில் பாசம் நிறைந்த உள்ளத்தோடு 7 அசாம் ஊழியர்களை அர்ப்பணித்து, ஜெபித்து அனுப்பிவைத்த சபையின் போதகர் Rev.Y. லாறன்ஸ் மற்றும் உதவிப்போதகர் திரு. R. ஜெயக்குமார் ஆமோஸ் ஆகியோருக்கு நன்றிகூறுகின்றோம்.

CSI கூவரகுவிளை திருச்சபையில் மேற்கு வங்க ஊழியர் ஒருவரை அர்ப்பணித்து அனுப்பிய சபை ஆயர் Rev.E. ஜெபசிங் ஐயாவுக்கு நன்றியைத் தெரிவிக்கிறோம்.

27.10.2019 அன்று மாலை 5:30 மணிக்கு 30 ஒடிசா மாநில மிஷனெரிகளின் பட்டமளிப்பு மற்றும் அர்ப்பண ஆராதனை தேவ மகிமைக்கென்று நடைபெற்றது. அலைஅலையாய் ஊழியர் எழும்பினார் என்ற எமில் அண்ணனின் பாடல் வரிகள், வெறுமனே பாடல் அல்ல, மாபெரும் தீர்க்கதரிசனம் என்பதை 30 ஊழியர்களும் பரிசுத்த பீடத்தண்டையில் வரிசையாக நின்றபோது கண்ட கண்கள் மகிழ்ச்சியின் கண்ணீரினாலும், உள்ளம் இயேசுவின் பெலத்தினாலும் நிறைந்தது. அலையலையாய் ஊழியர்களை எழுப்பிடும் ஆண்டவர்தாமே பொறுப்பெடுக்கும் உள்ளங்களையும், ஜெபிக்கும் முழங்கால்களையும் தருகிறார் என்பது நம் சிந்தைக்கு எட்டாத ஆச்சரியமே!

25,26,27 மூன்று நாட்களிலும் நடைபெற்ற நற்செய்திக் கூட்டங்கள் மற்றும் மிஷனெரி அர்ப்பண ஆராதனையைத் தலைமையேற்று, ஜெபத்துடனும் உற்சாகத்துடனும் நடத்தித் தந்த தலைமை ஆயர் Rev.T. ஜாண் பீற்றர், உதவி ஆயர் Rev.J. ஹட்சன் மற்றும் உதவித் திருப்பணியாளர் திரு. A. அனில் குமார் ஆகியோருக்கு நன்றி. பரிசுத்த பீடத்தை அலங்கரித்த மூலச்சல் சேகர சபைக்குட்பட்ட கிளை சபை போதகர்களுக்கும் நன்றி.

கூடுகை மிகச்சிறப்பாக நடைபெற தன்னலங் கருதாமல் உழைத்த விஷ்வவாணி ஊழியத்தின் பிரதிநிதிகள், ஊழியர்களைத் தாங்க குடும்பங்கள், ஜெபிக்கும் உள்ளங்கள், இயேசுவின் அன்பிலும் அவருடைய கிருபையிலும் பெருக ஜெபிக்கின்றோம். - பொன் சுபர்சன் மற்றும் குமரி மாவட்ட ஊழியர்கள்.

RNI REGD. NO. RN. 45021/89 | POSTAL REGD. NO. H/SD/182/2018-2020 - TAMIL | DATE OF PUBLICATION 20.12.2019

பணித்தளங்கள் பெற்ற பத்து புத்தாலயங்களுக்காக கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

NAVAGAON, GUJARAT - 19.10.19

VIRPUR, GUJARAT - 10.11.19

THEELESU, A.P. - 22.10.19

KARLAMUHAN, ODISHA - 10.11.19

ULEMCHARA PARA, TRIPURA - 27.10.19

GOURIGUDA, ODISHA - 10.11.19

ODADHA, A.P. - 02.11.19

BODDAVALASA, A.P. - 10.11.19

VIJAYPUR, U.P. - 10.11.19

RAIBAHADUR PARA, TRIPURA - 18.11.19

VISHWA VANI SAMARPAN - TAMIL LANGUAGE

Printed and Published by P. Selvaraj on behalf of VISHWA VANI, a registered society (Regn. No.17871 of 1987) and printed at CAXTON Offset Pvt. Ltd., 11-5-416/3, Red Hills, HYD-04. and published at 1-10-28/247, Anandapuram, ECIL Post, HYD-62. EDITOR: P. SELVARAJ. POSTING DATE: 23.12.2019